Registered as a Newspaper

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60


# உதயன்

சுடர் : 39
கதிர் : 329

ஞாயிற்றுக்கிழமை
20 ஒக்ரோபர் 2024

ஐப்பசி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"நாடு
அநுரவோடு
கடன்
எங்களோடு"



# கடனைக் குவிக்கிறது அநுர அரசாங்கம்!

## ஹர்ஷ டி சில்வா விளாசல்

**கொழும்பு, ஒக்ரோபர் 20**

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் தொடர்ச்சியாக கடன் பெற்றுக்கொண்டிருக்கிறது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டுள்ளது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

15

## 26ஆம் திகதி வரை வடக்கில் கனமழை

யாழ்ப்பாணம், ஒக். 20
வங்காள விரிகுடாவில் ஏற்படவுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, எதிர்வரும் 26ஆம் திகதிவரை வடக்கில் கனமழைக்குச் சாத்தியம் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

15



## நாளை மீண்டும் யாழ்தேவி ஓடும்

யாழ்ப்பாணம், ஒக். 20
வடக்கு ரயில் மார்க்கத்தில் நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் ரயில் சேவைகளை முன்னெடுப்பதற்குத்தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. இதன்படி, யாழ்தேவி ரயிலை நாளை சேவையில் ஈடுபடுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-ம-26)

## ஊழல் தொடர்பில் 400 கோப்புகள்!

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 20
ஊழல் மற்றும் மோசடி தொடர்பான 400 கோப்புகள் சட்டமா அதிபரிடம் உள்ளன. அவை அனைத்தும் சட்ட நடவடிக்கைகளுக்காக திறக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார தெரிவித்துள்ளார்.

15

## பெண்ணின் சங்கிலி கொள்ளை

யாழ்ப்பாணம், ஒக். 20
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியில் பெண்ணொருவரிடம் இருந்து தங்கச் சங்கிலியொன்று

15

## ஜனாதிபதி அநுரவின் உத்தரவு மனித உரிமைகளுக்குப் பங்கம்

கொழும்பு, ஒக். 20
நாட்டில் பொது ஒழுங்கைப் பேணுவதற்காக இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் விமானப் படையினருக்கு அழைப்புவிடுக்கும் வகையில் ஜனாதிபதி அநுர பிறப்பித்த உத்தரவால், நாட்டின் மனித உரிமைகளுக்குப் பாதிப்பு ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12ஆவது பிரிவின் கீழ் செப்ரெம்பர் 26ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஊடாக செப்ரெம்பர்

15

## தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸாருக்கு நேற்று அறிவுறுத்து!

யாழ்ப்பாணம், ஒக். 20
நாடாளுமன்றத் தேர்தலின்போது செய்யப்பட வேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் முறைப்பாடுகளுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸாருக்கு நேற்று அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாண மாவட்ட பதில் மாவட்டச் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில், மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில்

15

### வெடிகுண்டு மிரட்டல்

## இந்திய விமானமொன்று கட்டுநாயக்கவில் இறக்கம்

கொழும்பு, ஒக். 20
மும்பையில் இருந்து புறப்பட்ட இந்திய விமானம் ஒன்று வெடிகுண்டு அச்சுறுத்தலால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று மாலை அவசரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான அறிவுறுத்தல் விமான நிலையத்துக்கு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, விமானத்தில்

15

## வீதிப்போக்குவரத்து பொலிஸார் இனி கண்காணிப்பு வளையத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 20
வடக்கு மாகாண வீதிப்போக்குவரத்து பொலிஸாரை அவர்களின் கடமைநேரத்தில் இறுக்கமாகக் கண்காணிக்கும் பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
தொழில்நுட்பத் திணைக்களத்தின் உதவியுடன், பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வைத்து இந்தத் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

15

## விபத்தில் ஒருவர் பலி

கிளிநொச்சி, ஒக். 20
முழங்காவில் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நபர், சிகிச்சையின்

15

## ஓட்டோ, பணம் அபகரிப்பு

முல்லைத்தீவு, ஒக். 20
முல்லைத்தீவு - முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஓட்டோ சாரதி ஒருவரிடம் இருந்து ஓட்டோவும், 25 ஆயிரம் ரூபா பணமும் அபகரிக்கப்பட்டுள்ளது.

15

## மாவை மருத்துவமனையில்



யாழ்ப்பாணம், ஒக். 20
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு நேற்று இரவு திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது.
இதையடுத்து அவர் யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். சில மணிநேர சிகிச்சையின்

15

# சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்



# கோத்தாபய பலமற்றவர்

## பெரமுனவே கவலை

கொழும்பு, ஒக்.20

கோத்தாபய ராஜபக்ச ஒரு பலவீனமான அரச தலைவர் என்பதால் தான் நாடு வங்குரோத்து நிலையடைந்தது.

நாங்களும் இன்று அரசியல் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளோம் என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தல் தேசிய மட்டத்தைக் கொண்டது. பொதுத்தேர்தல் தேர்தல் தொகுதிகளை அடிப்படையாக கொண்டது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விவசாயிகளின் நலனை கருத்திற் கொண்டு தீர்மானங்களை எடுத்தால் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன். எவ்விதமான தூரநோக்கற்ற வகையில் உரம் தொடர்பில் கோத்தபாயராஜபக்ச எடுத்ததீர்மானத்தால்தான் நாடு நெருக்கடிக்குள்ளானது. எமது மக்களின் அடிப்படைத் தேவைகளையே நான் முன்னிலைப்படுத்து வேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# அஞ்சல்மூல வாக்களிப்பு 750,000 விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.20

**எதிர்வரும் பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்காக 7 இலட்சத்து 50 ஆயிரம் அஞ்சல் மூல விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

பொதுத்தேர்தலில் அஞ்சல்மூலம் வாக்களிப்பவர்களுக்கான வாக்காளர் பட்டியல் அத்தாட்சிப்படுத்தல் நடவடிக்கை இறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அஞ்சல்மூல வாக்குச்சீட்டுகள் எதிர்வரும் 23ஆம் திகதி அஞ்சலிடல் பணிகளுக்காகக் கையளிக்கப்படவுள்ளன. இதேவேளை, எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான அஞ்சல்மூல வாக்களிப்பு 5 நாள்கள் இடம்பெறவுள்ளன. அதன்படி, பொதுத்தேர்தலுக்கான அஞ்சல்மூல வாக்களிப்பு மாவட்டச் செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்களில் இந்த மாதம் 30ஆம் திகதியும் அடுத்த மாதம் 4ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. அத்துடன் ஏனைய அரச நிறுவனங்களிலும் இராணுவ முகாம்களிலும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் 4ஆம் திகதியும் அஞ்சல் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

குறித்ததினங்களில் வாக்களிக்க முடியாதவர்களுக்காக அடுத்த மாதம் 7ஆம் 8ஆம் திகதி வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (ச)



# ஈஸ்டர் தாக்குதல் விடயத்தில் அரசியல் செய்யவேண்டாம்

## அருட்தந்தை சிறில் காமினி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.20

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பேரழிவுடன் உதய கம்மன்பில அரசியல் செய்யக்கூடாது எனக் கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ வேண்டுகோள் விடுத்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக குழுக்களை அமைக்குமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவை நாங்கள் கேட்டுக்கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரட்ண நியமிக்கப்பட்டுள்ளமை குறித்தும் ஷானி அபயசேகர மீண்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறித்தும் எங்களுக்கு எந்தப் பிரச்சினையுமில்லை..

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் பேரழிவு குறித்து பெருமளவு அறிக்கைகள் வெளியாகியுள்ளன. சி.ஐ.டியினர் இது குறித்து பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும்.

முன்னைய அரசாங்கம் ஷானிஅபயசேகரவை நீக்கிய பின்னர் இது குறித்த விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை,தொடர்ச்சியான அரசியல் தலையீடுகளால் உயிர்த்த ஞாயிறுதாக்குதல் விசாரணைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை அடிப்படையாக வைத்து அரசியல் இலாபம் தேடுவதற்காக உதய கம்மன்பில இந்த விடயத்தைக் கையில் எடுத்தாரா? என்றும் அருட்தந்தை சிறில் காமினி கேள்வியெழுப்பியுள்ளார். (ச-இ)

### வாக்களிப்பு முறைமை

# பிரதேச செயலக ரீதியாக விழிப்புணர்வுச் செயற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 20

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் செல்லுபடியற்ற வாக்குகள் அதிகமாகவிருந்த காரணத்தால் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்காளர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகளைப் பிரதேச செயலக ரீதியாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு யாழ். மாவட்டக் கிராம அலுவலர்களுக்கான முன்னாயத்தச் செயலமர்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரண்டு கட்டங்களாக யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வெளிக்கள உத்தியோகத்தர்கள் மூலம் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கு கிராமஅலுவலர்கள் ஒத்துழைப்பை வழங்கவேண்டுமெனவும் நாடாளுமன்றத் தேர்தல் கடமைகளில் வினைத் திறனாக தமது பங்களிப்பை அளிக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (ச-66.9)



உரும்பிராய் ஞானவைரவ சனசமூக நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற முழுநிலா நிகழ்வில் 'வாசிப்புக் கலாசாரமும் சமூக மேம்பாடும்' எனும் தலைப்பில் கருத்தரங்கு இடம்பெற்றது.யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் இரத்தினகுமார் குபேசன் வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்.



### பளுதூக்கல் போட்டி

# தேசிய மட்டத்தில் அபிஷன் 3ஆம் இடம்

யாழ்ப்பாணம், ஒக். 20

தேசிய மட்ட பளு தூக்கல் போட்டியில் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் தரம் -10 இல் கல்வி பயிலும் ச.அபிஷன் எனும் மாணவன் 3ஆம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். இந்தப் போட்டி அண்மையில் பொலநறுவையில் நடைபெற்றது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு! இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!

## எதிர்வரும் 2 ஆண்டுகளுக்கான செயல் திட்டம்

1. எமது தமிழர் பரப்பான சுயத்திலும், புலத்திலும் பலமான கட்டமைப்பினை உருவாக்குதல்.

2. யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் 6 பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கிடையில், எவ்வித கட்சி வேறுபாடுமின்றி, ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்தி, அரசியல் தீர்வு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான பொதுத் தீர்மானத்தை நிறைவேற்றுதல்.

3. இளைஞர் இருப்பை தக்கவைத்து கொள்ளும் நடவடிக்கைகள்!
   - வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்.
   உதாரணம்: வீட்டுத் திட்டங்களுக்கு அருகிலுள்ள பிரதேசங்களில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் வகையில் முதலீட்டு திட்டங்களை செயல்படுத்துதல்.
   - கல்வி, விளையாட்டு மற்றும் கலைகளில் இளைஞகர்களின் ஈடுபாட்டை ஊக்குவித்து, போதைப்பொருள் மற்றும் வன்முறை இல்லாத சமுதாயத்தை உருவாக்குதல்.

4. அறிவோம் ஆழ்வோம் செயல் திட்டம்
   - அரசியல் மற்றும் பொருளாதாரத்திற்கான பயிற்சி பட்டறைகளை உருவாக்கி, கிராமம் முதல் நகரம் வரை விழிப்புணர்வை மேம்படுத்துதல்.
   - இதற்கான ஆக்கமும் ஊக்கமும் வழங்குவதன் மூலம், சிறந்த ஒரு தலைமுறையை உருவாக்குதல்.

5. போக்குவரத்து மேம்பாட்டு திட்டம்
   - பாதசாரிகள் மற்றும் மோட்டார் வாகன பயணிகள் நலன் கருதி, தார் வீதிகளில் காணப்படும் தூசு துகள்களை சுத்திகரிக்கும் இயந்திர கொள்வனவு.
   - போக்குவரத்து சமிக்ஞை விளக்குகளில் சிசிடிவி (CCTV) பொருத்துதல், சீரான போக்குவரத்து முறையினை கடைப்பிடிக்காதவர்களை கட்டுப்படுத்தல், சாலை விபத்துகள், குற்றங்களை பதிவு செய்து, பொதுமக்களின் பாதுகாப்பை மேம்படுத்தல்.

**இது எமது 2 வருட செயல் திட்டமாகும்; எமது 5 மற்றும் 30 வருடகால செயல் திட்டங்கள் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடப்படும்!**

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
பாராளுமன்ற தேர்தல் 2024

ஊஞ்சல் சின்னம்



4

சுயேச்சைக் குழு - 2

**E.S.P நாகரத்தினம் கமலரூபன்**
சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

மாற்றத்திற்கான நம்பிக்கை...



களத்தில் கமல்
2024 எமக்கான நேரம்

## பாராளுமன்ற தேர்தல் 2024

- யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டம் -

**மானுக்கு வாக்களிப்போம்**
**இனத்துக்கு வாழ்வளிப்போம்**



சட்டத்தரணி
**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
முதன்மை வேட்பாளர், தமிழ் மக்கள் கூட்டணி
முன்னாள் முதல்வர், யாழ்.மாநகர சபை.



1
**உமாகரன் இராசையா**
- சட்டத்தரணி -



2
**கதிரேசன் சஜீதரன்**
- பிராந்திய முகாமையாளர் -



3
**தவச்செல்வம் சிற்பரன்**
-கட்டடக் கலைஞர் -



4
**நா.கோகுலவாணி**
- தொழில் முயற்சியாளர் -



5
**பிரான்சிஸ் செல்ரன்**
- கிரிக்கட் பயிற்றுனர் -



6
**ஸ்ரீ.மிதிலைச்செல்வி**
- நிறைவேற்று அதிகாரி SLIC-



7
**முருகானந்தன் யசிந்தன்**
- ஆசிரியர் -



8
**வரதராஜன் பார்த்திபன்**
- முன்னாள் மாநகர சபை உறுப்பினர் -



9
**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
- முன்னாள் முதல்வர் -

**தமிழ் மக்கள் கூட்டணி**



X

**யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்ட பாராளுமன்ற தேர்தலில் வைத்தியர் அர்ச்சுனா தலைமையிலான சுயேச்சைக்குழு 17 ற்கு மருந்தேற்றும் குழல் (ஊசி) சின்னத்தில் வாக்களிப்பீர்.**



இராமநாதன் அர்ச்சுனா
(வைத்தியர்)
X 02

## அநீதிக்கெதிரான குரல்

சிவப்பிரகாசம் மயூரன்
(பொறியியலாளர்)
X 08

சுயேட்சை குழு 17 X

சிவசுப்ரமணியம் யோகபாலன்
(மென்பொறியியலாளர்)
X 09

01 02 03 04 05 06 07 08 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பையும், தமிழரசையும் சிதறடித்தவர் சுமந்திரனே

## சுரேஷ் பிரேமச்சந்திரன் காட்டம்

கொழும்பு, ஒக். 20

**தமிழ் மக்களின் இனவிடுதலைக்காக போராடக் கூடிய பெரிய அமைப்பாக இருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சிதறிப் போவதற்கு மூலகாரணமான சுமந்திரனுக்கு சின்னம் தொடர்பில் கதைப்பதற்கு யோக்கியதை இல்லை என்று தெரிவித்த ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பில் உள்ள சிவில் தரப்புகளின் இணைக்கத்துடனே சங்கு சின்னத்தை பாதுகாத்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது, சுமந்திரனின் நிகழ்ச்சி நிரல் கூட்டமைப்பு ஒழிக்கப்பட வேண்டும் என்பதுடன் தமிழரசுக் கட்சியையும் ஒழிக்க வேண்டும் என்பதே. அந்த வகையில் தமிழரசு கட்சி சின்னா பின்னமாக்கப்பட்டுள்ளது. முதல் ஒரு வழக்கு இப்போது இரண்டாவது வழக்கு போடப்பட்டிருக்கிறது. இந்த வழக்குகள் முடிவடைந்து தமிழரசு கட்சி தலைநிமிர்ந்து வரும் என்று யாரும் கூறலாம். ஆனால் அடுத்த பல வருடங்களுக்கு இந்த வழக்குகள் இழுபறிப்படப்போகின்றது என்பதே உண்மையாகும். முக்கியஸ்தர்கள் பலர் அக்கட்சியில் இருந்து விலகிச் செல்ல ஆரம்பித்திருக்கின்றார்கள். தமிழரசுக் கட்சியின் நிலை இவ்வாறு இருக்கையில் மற்றவர்கள் கொள்ளையடிக்கிறார்கள், கொலை செய்கிறார்கள் என்று பேசுபவர்களுக்கு அவர்களது சொந்த வாழ்க்கையில் அவர்கள் யார்? அவ்வாறானவர்கள் மதபோதகர்களாக இருந்து கொண்டு பிரசாரங்களை செய்தவர்களே தவிர தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை பேசுபவர்களாக அவர்கள் இருக்கவில்லை - என்றார். (ஒ-100)



## யாழ். வணிகர் கழகத்துடன் பெண் வேட்பாளர்கள் சந்திப்பு

கொழும்பு,ஒக்.20

சனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பெண் வேட்பாளர்கள் கடந்த வியாழக்கிழமை யாழ். வணிகர் கழகத்தினரைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் சனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் போட்டியிடும் வன்னி மாவட்ட முன்னாள் போராளியான கருணாநிதி யசோதினி, யாழ்ப்பாண மாவட்ட பெண் வேட்பாளர் சசிகலா ரவிராஜ் மற்றும் யாழ். வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரம் ஆகியோர் கலந்துரையாடினர்.

இதன்போது எதிர்வரும் தேர்தலில் பெண் வேட்பாளரின் முக்கியத்துவம், பெண்களை அரசியலில் ஈடுபடுத்துவதன் நோக்கம் மற்றும் பெண்கள் ஏன் அரசியலில் ஈடுபடவேண்டும் என்பது பற்றிக் கலந்துரையாடப்பட்டன. (ச-26)

## மஹிந்த சிந்தனை என்றும் மறையாது

கொழும்பு, ஒக்.20

ராஜபக்சக்கள் அரசியலில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மஹிந்த ராஜபக்சவின் கொள்கைகள் என்றும் வாழும். ஆதனை சாகடிக்க முடியாது என்று சூளுரைத்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ராஜபக்சக்களின் அரசியல் முடிந்துவிட்டதா, இல்லையா என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

மஹிந்த ராஜபக்ச அரசியலில் இருக்கின்றாரா, இல்லையா என்பது அல்ல, அவரின் கொள்கைகள் இருக்குமா என்பதே முக்கியம். மஹிந்த சிந்தனை உள்ளிட்ட அவரின் கொள்கைகளை அழிக்கவேமுடியாது. பண்டாரநாயக்கவின் கொள்கையை மையப்படுத்தியதாக சுதந்திரக் கட்சி இன்று இருப்பதுபோல, மொட்டுக் கட்சி மஹிந்தவின் கொள்கையை அடிப்படையாகக்கொண்டதாக அமையும்- என்றார். (ச-44)

## சலுகை அரசியலுக்கு விலைபோகமாட்டோம்

### வேட்பாளர் எமில்காந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.20

ஒவ்வொரு பிரஜைகளும் சொந்தக்காலில் நிற்கக்கூடிய ஆற்றலை ஏற்படுத்தினால் இனப்பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்தமுடியும். நிலையான அபிவிருத்திகளைக் கொண்ட மனித பௌதீக வளங்களை ஒன்றிணைத்து அபிவிருத்திகளை ஏற்படுத்தி சமூகத்தை தன்னிறைவடைய செய்யவேண்டும்,

-இவ்வாறு நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சைக்குழு சார்பாக கோடாலிச்சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் விடுதலை புலிகள்அமைப்பின் முக்கியஸ்தர் எனப்படும் எமில்காந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா குருமன்காட்டிலுள்ள அலுவலகத்தில் இடம்பெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் காலங்களில் சலுகை அரசியலை பேசி மக்களிடம் கடந்தகாலங்களில் வாக்குக் கேட்கப்பட்டது. நிலையான அபிவிருத்திகளை கொண்ட மனித பௌதீக வளங்களை ஒன்றிணைத்து அபிவிருத்திகளை ஏற்படுத்தி சமூகத்தை தன்னிறைவடையச் செய்யவேண்டும்,

தேர்தல் காலங்களிலும் சரி அதற்குப் பின்னரும் சரி மது ஒழிப்புஎன்ற விடயத்தில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை நாம் முன்னெடுப்போம். இனப்பிரச்சினை தீரவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. நாங்கள் நிரந்தரமான நிலையான அபிவிருத்தியை கையில் எடுத்திருக்கின்றோம் - என்றார். (ச-110)



## சிறுவர், முதியோர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.20

சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம், பிரதேசமட்ட முதியோர் சமாசம் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் சிறுவர், முதியோர் தின நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவக்கலாநிதி திருமதி தயாளசீலன் பூங்கோதை பிரதம விருந்தினராகவும், சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி சூசைப்பிள்ளை றொபேட் உதயகுமார் சிறப்பு விருந்தினராகவும், கலந்து கொண்டனர். (ச-25, 66)



## சந்திப்பு

கொழும்பு, ஒக்.20

யாழ்.மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபனுக்கும், யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூஸன் சூரிய பண்டாரவுக்குமிடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

சந்திப்பில் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. (ச-66.27.9)



ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் வேட்பாளர்களாகப் போட்டியிடும் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் சி.சிவகுமார் ஆகியோர் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை வடமராட்சியில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்துள்ளனர். (ச-25,100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையவழி நிதி மோசடி

# வெளிநாட்டுப்பிரஜைகள் 218 பேர் 15 நாள்களில் கைது

கொழும்பு , ஒக்.20

இணையவழி நிதி மோசடி தொடர்பான குற்றச்சாட்டின் அடிப்படையில் கடந்த 15 நாள்களுக்குள் மாத்திரம் 218 வெளிநாட்டுப் பிரஜைகள் பாதுகாப்பு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் சீனப் பிரஜைகள் தவிர்ந்து, மலேசியர்கள், எத்தியோப்பியர்கள், கென்ய நாட்டவர்களும் அடங்குவதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர். (ச)

# விசாரணை நடத்துங்கள் உண்மை தெரியவரட்டும்



கொழும்பு, ஒக்.20

**போரை முடிவுக்குக்கொண்டுவந்த தலைவர் மஹிந்த ராஜபக்ச தொடர்பில் ஜே.வி.பி.யினரே சமூகத்தில் தவறான விம்பத்தை தோற்றுவித்தனர். விசாரணை நடத்தப்பட்டால் கொள்ளையர்கள் யார், நல்லவர்கள் யார் என்பது வெளிச்சத்துக்கு வரும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது,

போலிப் பரப்புரைகள் மூலமே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ராஜபக்சக்கள் கள்வர்கள் என்ற விம்பத்தை ஜே.வி.பி.யினர் சமூகத்தில் விதைத்தனர். இதனை சிலர் நம்பினர். அந்த விரக்தியின் வெளிப்பாடாகவே இம்முறை தேர்தல் முடிவு அமைந்தது.

எது எப்படி இருந்தாலும் பல எதிர்பார்ப்புகளுடன்தான் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மக்கள் வாக்களித்தனர். எனவே, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். மாறாக போலி வாக்குறுதிகளை வழங்கி மக்களுடன் விளையாட முற்படக்கூடாது.

உகண்டாவில் பணம் பதுக்கப்பட்டுள்ளதுஎனக் கூறினர். தற்போது அது தொடர்பில் மாறுபட்ட கதையைக் கூறுகின்றனர். கள்வர்கள் தொடர்பில் விசாரணையை ஆரம்பிக்குமாறு வலியுறுத்துகின்றோம். அரசாங்கத்தைவிட இது விடயத்தில் எமக்குத்தான் ஆர்வம் அதிகமாக உள்ளது. அப்போதுதான் உண்மையான கள்வர்கள் யாரென்பது தெரியவரும் - என்றார். (ஒ-44)

## இணையத்தில் மோசடி 10 வெளிநாட்டவர் கைது

இணையத்தில் நிதி மோசடி தொடர்பில் மேலும் 10 வெளிநாட்டவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். புத்தளம், இரணைவில பகுதியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் இவர்கள் தங்கியிருந்த வேளையில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல்களுக்கு அமைய இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

4 மலேசிய ஆண்களும், 3 எத்தியோப்பிய ஆண்களும் ஒரு பெண்ணும், ஒரு கென்யா பெண்ணும், ஒரு சீனா ஆணுமே இவ்வாறு கைதானவர்கள் ஆவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர். (ச)



## யானை - ரெலிபோன் சங்கமம் சாத்தியமே!

ருவான் ஆரூடம்

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் எதிர்காலத்தில் ஒன்றிணைவதற்குரிய சாத்தியம் உள்ளது எனவும், பொதுத் தேர்தலின் பின்னர் இந்தச் சங்கமம் நடக்கலாம் எனவும் ஐ.தே.க.வின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்;

ஐக்கிய மக்கள் சக்தியையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் ஒன்றிணைத்து தேர்தலில் போட்டியிட வைப்பதற்குரிய முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனினும், அந்த முயற்சி கைகூடவில்லை. எனினும், இவ்விரு தரப்பும் ஒரு முகாமில் இருந்தவை. எனவே, இரு தரப்பினரும் இணைவதற்குரிய சாத்தியம் உள்ளது. பொதுத்தேர்தலின் பின்னர் இணையும் சூழ்நிலை உள்ளது - என்றார். (ச-44)

## மலையக மக்களை மறந்தார் ஜனாதிபதி

ஜீவன் ஆதங்கம்



கொழும்பு , ஒக்.20

நாட்டில் உள்ள மீனவர்களுக்கும் விவசாயி களுக்கும் சலுகைகளை வழங்கிய புதிய ஜனாதிபதி ஏன் பெருந்தோட்டத் தொழிலாளர்க ளுக்கு எவ்வித சலுகைகளையும் வழங்கவில்லை என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான ஜீவன் தொண்டமான் கேள்வியெழுப்பியுள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுடைய சம்பள விடயத்தில் 1350 ரூபா அடிப்படைச் சம்பளமும் மேலதிக கொடுப்பனவு 350 ரூபாவை அதிகரிக்குமாறு சம்பள நிர்ணய சபையில் நாங்கள் கோரிக்கையை முன்வைத்தபோது அதனை நிராகரித்துள்ளது தற்போதய ஜனாதிபதியுடைய கட்சியான தேசிய மக்கள் சக்தி என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## சமாதானம் வேண்டி திருத்தல யாத்திரை

யாழ்ப்பாணம், ஒக்.20

இலங்கையில் நிரந்தர சமாதானம் நிலவ வேண்டி இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காமக் கந்தன் ஆலயம் வரையான புனித திருத்தலத் தரிசன யாத்திரை கடந்த வியாழக்கிழமை இலங்கை முதல் உதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் ஆணையாளர் வை.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆரம்பமானது.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடுகளைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீனமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் தேங்காய் உடைத்து, ஆசி உரை ஆற்றித் தரிசன யாத்திரையை ஆரம்பித்து வைத்தார். குறித்த யாத்திரையில் பங்கேற்றுள்ள அடியவர்கள் கிளிநொச்சி, வவுனியா, திருகோண மலை, மட்டக்களப்பு ஊடாகப் பிரசித்திபெற்ற ஆலயங்களில் பூசை, பஜனை வழிபாடுகளுடன் கதிர்காமம் ஏழுமலையான் ஆலயத்தை சென்றடைவர். (ச-66)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ரின்' இலக்கம் பெற்றுக்கொண்டோர் எட்டு இலட்சமாக அதிகரித்தது

கொழும்பு, ஒக். 20
உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வரி செலுத்துவோரை பதிவுசெய்வதற்காக 2023 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ரின் இலக்கத்தின் கீழ் வரி செலுத்தவேண்டியவர்களின் எண்ணிக்கை 8 லட்சத்து 68 ஆயிரத்து 9 ஆக அதிகரித்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, வருமான வரி செலுத்துவதற்கு பதிவுசெய்திருந்த போதிலும், வர்த்தக நடவடிக்கைகளை நிறைவுசெய்தல் அல்லது வருமான ஆதாரங்கள் இல்லாமை போன்ற காரணங்களால் வரிசெலுத்த வருமானம் இல்லை என்றால், வரி செலுத்துவதற்கான பதிவை ரத்துச் செய்யலாம்.
வரி செலுத்தப் போதுமான வருமானம் அல்லது இலாபம் இல்லை என்றால், அதை நிரூபிக்கக் கூடிய ஆவணங்களை அடுத்த மாதம் 30ஆம் திகதிக்கு முன் நிகழ்நிலை ஊடாக திணைக்களத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

# நுரைச்சோலையில் வீடுகள் கையளிப்பு



கொழும்பு, ஒக். 20
நுரைச்சோலையில் சவூதி அரசின் நிதியுதவியின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகளை கையளிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.
சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென 2009 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட 500 வீடுகள் இதுவரை கையளிக்கப்படாமல் இருந்தன.
இந்த வீடுகளைக் கையளிக்கும் நோக்கில் சவூதி அரசுடன் ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார். (ச-6)



# டெங்கு உயர்வு 20 உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 20
இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 40 ஆயிரத்து 958 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ளனர்.
கொழும்பு மாவட்டத்தில் 10 ஆயிரத்து 284 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
அதேவேளை இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 20 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச -இ)



# கலந்துரையாடல்

மன்னார், ஒக்.20
மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
மன்னார் மாவட்டத்தில் வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காலத்தில் ஏற்படவுள்ள இடர்களைக் குறைப்பது தொடர்பாகவும், அதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது, இடர் ஏற்பட்டால் எவ்வாறு தடுப்பது என்பது குறித்தும் ஆராயப்பட்டது.
மேலும் மன்னார் மாவட்டத்தில் வெள்ள நிலைமையின் போது மக்கள் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்குவதற்கு 30க்கும் மேற்பட்ட தற்காலிக பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதுடன் அதற்காக முன்னெடுக்கப்படவேண்டிய ஏற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.
கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அனைத்து முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கே. திலீபன் மற்றும் முப்படையினர், திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-ரி)

# பணிஎழில் விழா; ஆக்கம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 20
பணி ஓய்வு பெறும் ஹாட்லிக் கல்லூரி அதிபர் த.கலைச்செல்வம் அவர்களது கல்விச் சேவையினை பாராட்டும் விதமாக கலைச்செல்வன் பணிஎழில் விழா வரும் டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெற உள்ளது.
ஹாட்லிக் கல்லூரி அதிபர் தம்பையா கலைச்செல்வன் 34 வருடங்கள் கல்விப்பணி புரிந்து அரச சேவையில் இருந்து ஓய்வு பெற உள்ளதை முன்னிட்டு அவரது மாணவர்களின் ஏற்பாட்டில் கலைச்செல்வம் பணிஎழில் விழா பருத்தித்துறை சூரிய மஹால் மண்டபத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த விழாவின் போது த.கலைச்செல்வன் அவர்களின் சேவையை பாராட்டி 'கலைச்செல்வம்' என்ற மலர் வெளியிட்டு வைக்கப்பட உள்ளதால் இந்த மலருக்கான ஆக்கங்கள் மற்றும் ஒத்துழைப்புகளையும் வழங்குமாறும் விழா ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஒ-22-100)

# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.20
உரும்பிராய் வலிகாமம் கிழக்கு பிரதேசசபை பொதுநூலகத்தில் தேசிய வாசிப்பு மாத இறுதி நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் உரும்பிராய் கற்பக விநாயகர் மணிமண்டபத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஒ-ரி)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர்செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். மகிழ்ச்சி தரும் செய்தி வந்து சேரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**இடபம்:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியங்கள் சாதகமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். இலாபம் வழக்கம் போல் இருக்கும்.

**மிதுனம்:** பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை. மனஸ்தாபம் நீங்கும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சி எடுப்பதற்கு சாதகமான நாள். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் இருக்காது. மகிழ்ச்சி உண்டு. அலைச்சல் ஏற்படக்கூடும். விற்பனையும் இலாபமும் வழக்கம் போலவே இருக்கும்.

**சிம்மம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படும். பிணக்குகள் நீங்கும். ஆதாயம் உண்டாகும். சூரியபகவானை வழிபடுவது நன்று. பணியாளர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகளை மேற்கொள்வது சாதகமாக முடியும். நல்ல செய்தி வந்து சேரும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரம் வழக்கம்போலவே நடைபெறும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்பு தருவார்கள். எதிரிகள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்** : வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலையே காணப்படும். உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு.

**மகரம்:** புதிய முயற்சி எதுவும் வேண்டாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும்.

**கும்பம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சக வியாபாரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். தட்சணாமூர்த்தி வழிபாடு நன்று.

**மீனம்:** பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மனவருத்தங்கள் நீங்கும். புதிய முயற்சியைத் தொடங்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வதைப்பது தகுமா...?

அரசியல் தஞ்சம்கோரி இந்தியாவுக்குச் சென்ற நிலையில், தமிழ்நாட்டின் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழர்கள் தங்களை விடுதலைசெய்ய வலியுறுத்தி அண்மைய நாள்களாக போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். 'வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட்ட தம்மை, முகாம் வாழ்வில் இருந்து விடுவிப்பதற்கு எதற்குத் தாமதம்?' என்பதுதான், போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அத்தனை உறவுகளினதும் ஒற்றைக் கேள்வியாக உள்ளது.

இந்த வருடம் இடம்பெற்ற இந்திய மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக, ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் அரசாங்கத்தால் அங்கு குடியுரிமைத் திருத்தச் சட்டம் புதுப்பிக்கப்பட்டது. இதன்மூலம், கடந்த 75 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 'அதாவது சுதந்திர இந்தியா மலர்ந்த பின்னர், இந்தியாவுக்குள் தஞ்சமடையும் ஒருவர் இந்தியக் குடியுரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புகள் மிகவும் இலகுபடுத்தப்பட்டன. ஆனால், அந்த வாய்ப்பு அனைவருக்குமானதாக அமையவில்லை. இந்தியாவுக்கே உரிய தனித்திறமையான 'வஞ்சித்தல்' மட்டுமே குடியுரிமைத் திருத்தச் சட்டத்திலும் எஞ்சியிருந்தது. ஏனெனில், பிராந்தியத்தில் அல்லது அயல் நாடுகளில் பாதிக்கப்படும் அனைத்து மக்களுக்குமான திருத்தச் சட்டமாக இந்தக் குடியுரிமைத் திருத்தம் அமையவில்லை. மாறாக அயல்நாடுகளில் வஞ்சிக்கப்படும் இந்துக்களும், சமணர்களும், பௌத்தர்களும் மற்றும் சீக்கியர்களும்தான் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் கீழ், இந்தியக் குடியுரிமையை இலகுவாகப் பெற்றுக்கொள்ள வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மேற்குறிப்பிட்டுள்ள நான்கு பிரிவினருக்கும் அப்பாற்பட்ட இன, மத குழுமங்களுக்கு நீதியென்பது இன்னமும் இந்தியாவில் எட்டாக்கனிதான். அதற்குரிய வலுவான சாட்சியமே, திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழர்கள் தம்மை முகாம் வாழ்விலிருந்து விடுவிக்கும்படி மேற்கொண்டுள்ள போராட்டம்.

70 ஆண்டுகளுக்கும் குறையாத இழிநிலை அரசியலாலும், 30 ஆண்டுகளுக்கும் குறையாத ஆயுதப் போராட்டத்தாலும் ஈழத்தமிழர்கள் அடைந்த துன்பங்களும், எதிர்கொண்ட பின்னடைவுகளும் கொஞ்சநஞ்சமல்ல. இனியும் இங்கு வாழமுடியாது என்ற கட்டத்தில்தான் பல்லாயிரம் ஈழத்தமிழர்கள் இந்தியாவுக்குள் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். ஆனால், முகாம் வாழ்க்கையே இன்றளவும் அவர்களுக்கு முடிவென்றாகியிருக்கின்றது. பரந்து பட்ட திட்டம் ஒன்றின்மூலம் அவர்களுக்குக் குடியுரிமையை வழங்க இன்னமும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், இந்த விடயத்தில் கொழும்பை மீறி ஓர் அடியேனும் எடுத்து வைக்க புதுடில்லி தயாரில்லை. இந்தியக் குடியுரிமை கிட்டுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ள இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள் மற்றும் சீக்கியர்களை விடவும், ஈழத்தமிழர்கள் குடியுரிமை தொடர்பான கோரிக்கைகளை முன்வைக்க கூடுதல் உரித்துடையவர்கள். ஏனெனில், இலங்கையில் இடம்பெற்ற நீண்டதும் நெடியதுமான போரில் இந்தியாவின் நேரடித்தலையீடு மிகமிக அதிகம். ஒரு விதத்தில் பார்க்கையில், இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள அகதிகள் பிராந்திய வல்லாதிக்க சதிராட்டத்தின் பிரதிபலிப்புத்தான். ஆதலால், அவர்களின் விடயத்தில் கூடுதல் பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கவே செய்கின்றது. பிராந்திய வல்லரசு என்ற வகையிலும், 'தமிழர்களின் மீட்பராக' தன்னை அடையாளப்படுத்தும் ஒரு தேசம் என்ற ரீதியிலும் ஈழத்தமிழர்களின் முகாம் வாழ்வுக்கு இந்திய அரசு முடிவுரை எழுதியே ஆகவேண்டும்.




## இலங்கைத் தமிழ்ச் சினிமா; கவனம் செலுத்தும் அரசு

கொழும்பு, ஒக். 20

**இலங்கையில் தமிழ்ச் சினிமாவை ஒரு தொழில்துறையாக வளர்ச்சியடையச் செய்யவேண்டும் என்று புத்தசாசனம், மத அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மன்றம் ஆகியவற்றுக்கான பணிப்பாளர்சபையை நியமிக்கும் நிகழ்வில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்ச் சினிமாவை இந்த நாட்டில் இன்னும் ஒரு தொழில்துறையாக நிலைநிறுத்த முடியவில்லை. எதிர்காலத்தில் தமிழ்ச் சினிமாவை இந்த நாட்டில் ஒரு தொழில்துறையாக வளர்ச்சியடையச் செய்யவேண்டும்.

தேசிய திரைப்படக் கழகம் நவீன காலத்துக்கு ஏற்றவாறு புதுப்பிக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## தூதரகத்தின் அறிவுறுத்தல் பின்பற்றுவது கட்டாயம்

கொழும்பு, ஒக். 20

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் இலங்கைத் தூதரகத்தின் அறிவுறுத்தல்களை பின்பற்றி நடக்குமாறு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. குறிப்பாக லெபனானிலுள்ள இலங்கையர்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறுவது அல்லது விலகியிருப்பது தொடர்பாக இலங்கைத் தூதரகத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நடக்குமாறு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கு தொலைபேசி இலக்கங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. 0112 338812, 0117711194 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தமது உறவினர்கள் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ-6)

## ரூபா ஏற்றம்

கடந்த புதன்கிழமையுடன் ஒப்பிடுகையில், அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்றுமுன்தினம் மேலும் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்தியவங்கி தெரிவித்துள்ளது. அதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது முறையே 288.52 ரூபாவாகவும், 297.53 ரூபாவாகவும் உள்ளது. (ச)

## முதலீட்டுச்சபைக்கு புதிய தலைவர்

கொழும்பு, ஒக். 20

இலங்கை முதலீட்டுச்சபையின் புதிய தலைவராக அர்ஜுன ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் எர்ன்ஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான மூத்த பங்குதாரராகவும் ஆலோசனைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். (ச)



## வல்லையில் முதலை சாவு

யாழ்ப்பாணம், ஒக். 20

வல்லை மண்டான் சந்திக்கு அருகில் முதலையொன்று வாகனத்தில் சிக்கி உயிரிழந்துள்ளது. மாரிகாலம் என்பதால் வல்லைவெளியிலிருந்து நீர்நிலை நோக்கி நகர்ந்த முதலையே வீதியில் சென்ற வாகனத்தில் சிக்கி உயிரிழந்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (ச)

**நாளை**

21.10.2024

திங்கட்கிழமை - ஐப்பசி - 04

சுபநேரம் : 12.02-01.32 ராகுகாலம் : 07.32 -

**நாளொரு நல்வார்த்தை**

மனிதனின் இயல்பு மூலிகையாகவும் வளரலாம்,
களைகளாகவும் வளரலாம்.
உரிய காலத்தில் மூலிகைக்கு நீர் வார்த்து
களையை அழிக்கவேண்டும்.

- பிரான்சிஸ் பேகன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலை மனுக்கோரல்
## தேநீர்ச் சாலை
## சென்.ஜோண்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

மேற்படி கல்லூரியில் இயங்கும் தேநீர்ச்சாலையை குத்தகை ஒப்பந்த அடிப்படையில் நடத்தக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


விண்ணப்பப்படிவத்தினை கீழே குறித்த திகதியில் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| விண்ணப்பப்படிவ விநியோகம் | : 22.10.2024 - 05.11.2024 |
| விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதி | : 19.11.2024 |
| விண்ணப்பக்கட்டணம் (மீளளிக்கப்படாதது) | : ரூபா 500.00 |
| மீளளிக்கப்படக்கூடிய கட்டுப்பணம் | : ரூபா 10.000.00 |

விண்ணப்பங்கள் யாவும் "தேநீர்ச்சாலை ஒப்பந்த விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்பட்டு மூடிய உறையில் அலுவலக நேரத்தில் பாடசாலையில் நேரடியாகக் கையளிக்கப்பட வேண்டும். பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் 20.11.2024 அன்று கல்லூரி அலுவலகத்தில் நண்பகல் 12.00 மணிக்கு திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டு தகுதியானவர் தெரிவுசெய்யப்படுவர்.

அதிபர்

# பொன்விழா
# வாழ்த்துக்கள்



**20.10.2024 ஞாயிற்றுக்கிழமை பொன்விழாக் காணும்**

### திரு திருமதி சந்திரசேகரம் பரமேஸ்வரி

தம்பதியினரை அகமகிழ திருமண நன்னாளில்
வாழ்த்துவதோடு அவர்கள் மேன்மேலும் பல செல்வங்களையும்
பெற்று வாழ்க்கையில் சிறப்புற வாழ்ந்திட வேலணை
முத்துமாரியம்பாள் சிரம்தாழ பிரார்த்திக்கின்றோம்.

**சிற்பனை வீதி,**
**6ஆம் வட்டாரம்,**
**வேலணை.**

**கங்கைவேணியன்**
**குடும்பம்**

## மணமகன் தேவை

1996, இந்து, விசாகம், ASST.MANAGER
பூர்வீகம் - மாதகல். வதியுமிடம் - LONDON
**மணமகள் பதிவு இல: 11085**
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை
www.EQMarriageService.com
அழையுங்கள் : 076 664 9401
(CS/29038A) J-1

## மணமகன் தேவை

1988, இந்து, உத்தரட்டாதி, TEACHER
பூர்வீகம் - யாழ்ப்பாணம். வதியுமிடம் - AUSTRALIA
**மணமகள் பதிவு இல: 11096**
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை
www.EQMarriageService.com
அழையுங்கள் : 076 664 9401
(CS/29040 A) J-1

## வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவை

யாழ்ப்பாணத்தில் வேலைத்தலம் ஒன்றிற்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் 4 பரப்புக்கு வீடு அல்லது கட்டடம் அல்லது வெற்றுக்காணி தேவை.

**076 902 2221**

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவ்விழ தென்னை, விலும்பி நெல்லி, முருங்கை, பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்தான், ஏலக்காய், சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, உரும்பிராய் மேற்கு,**
**பிள்ளையார் கோயில் வீதி,**
**கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
**K.K.S. வீதி, இணுவில்**
(CS/56309) J-1

## வீடு வாடகைக்கு

மூன்று மாடி வீடு கே.கே.எஸ் வீதி, பிறவுண் வீதி யாழ் இந்துக்கல்லூரி, இந்துமகளிர் கல்லூரி, பல்கலைக்கழகம் தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய இடங்களுக்கு அரை மைல் தூரத்தில் முழுமையாகவும் பிரித்து தனித்தனியாகவும் வாடகைக்கு உண்டு நிறுவனங்கள் நடத்துவதற்கு உகந்தது.

**076 4048360 , 071 7943362**

## மணமகன் தேவை

1995, இந்து, பூசம், VETERINARY SURGEON
பூர்வீகம் - மீசாலை. வதியுமிடம் - கொழும்பு
**மணமகள் பதிவு இல: 11098**
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை
www.EQMarriageService.com
அழையுங்கள் : 076 664 9401
(CS/29038A) J-1

## மணமகன் தேவை

1992, இந்து, றோஹினி, DOCTOR
பூர்வீகம் - கரணவாய். வதியுமிடம் - கொழும்பு
**மணமகள் பதிவு இல: 11102**
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை
www.EQMarriageService.com
அழையுங்கள் : 076 664 9401
(CS/29038A) J-1

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருந்து ஏறத்தாழ 100மீற்றர் தொலைவில் 4.5 பரப்பு காணி விற்பனைக்குண்டு. வர்த்தகர்களுக்கும், வீடு கட்டுவதற்கும் உகந்த நிலப்பரப்பாகும். முகவர்கள் [illegible]தவையில்லை.

**075 [illegible]77 1885**

பி.ப 4 மணிக்குப் பின் தொடர்புகளை மேற்கொள்ளலாம்.

# UK Immigration Consultancy

# Student Visa

Undergraduate and PostGraduate Degrees

No IELTS needed if you have O/L Credit pass for English (IELTS தேவையில்லை க.பொ.த.(சா.தர)ப் பரீட்சையில் ஆங்கிலத்தில் C சித்தியடைந்தால் போதுமானது).

Places available for January intake

## Skilled Worker Visa

Only the visa applications
(Visa விண்ணப்பம் மட்டும் செய்து தரப்படும்.)

## UK Visa Refusals

All types of UK visa refusals ( visit visa, student visa, skilled worker visa, spouse visa)

We will introduce you to experienced lawyers based in UK to handle your:


- Admin Review
- Tribunal Appeal
- Judicial Review.

(அனைத்து வகையான Visa நிராகரிப்புகளுக்குமான AdminReview , Tribunal Appeal , Judicial Review செய்து தரப்படும்)

**Please contact : 0770191110**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 13 . 02 . 1931

மறைவு 19 . 09 . 2024

## அமரர் மங்கையற்கரசி சிவஞானம்

எமது தாயார் மங்கையற்கரசி சிவஞானம் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து (ரொறன்ரோ - கனடா) நேரில் வந்து அனுதாபம் தெரிவித்த வர்களுக்கும், தொலைபேசியூடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பத்திரிகை வாயிலாக கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், முகநூல் ஊடாக அனுதாபச் செய்தியை அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் அன்னார் நினைவாக இன்று (20.10.2024) ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய அன்னதான மணி மண்டபத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

கற்பகப் பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

சிவஞானம் சிவராம் (மகன்)

(CS/56474) J-1

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 1947 . 10 . 29

மறைவு 2024 . 10 . 16

## கிருஸ்ணசாமி வாசுதேவன்

(ஓய்வு பெற்ற சுகாதாரத்துறை சார்ந்த ஒளிப்பட இயக்குநர்)

தற்போதைய வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் கணக்காளராக 2014 ஆம் ஆண்டிலிருந்து 2024.10.16 ஆம் திகதி வரை தினமும் கடமை தளராது மகத்தான சேவையாற்றி எம்மைவிட்டுப் பிரிந்த அமரர் அவர்கள் ஆதீன மகாசபை அங்கத்தவருமாவார்.


அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்ப அங்கத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய வேங்கடேசனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

பிரிவின் துயரில்
தேவஸ்தான பிரதமகுரு,குருமார்கள் ,
ஊழியர்கள் மற்றும் நிர்வாகத்தினர்.

### கொழும்பில் இந்தியக் கப்பல்

இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான கப்பல் நேற்று சனிக்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இக் கப்பலை இலங்கை கடற்படையினர் சம்பிரதாய பூர்வமாக வரவேற்றனர். கடலோரக் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் முதன்மையாக விளங்கும் இந்தக் கப்பலின் சேவை 2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்தக்கப்பலானது பல்வேறு தொழில்நுட்ப கருவிகளைக் கொண்டு வந்துள்ளது. இந்தக் பொருட்கள் இலங்கை கடற்படையிடம் ஒப்படைக்கப்படும். (ஒ-இ)

# மரண அறிவித்தல்



மண்ணில் 10 . 04 . 1951

விண்ணில் 17 . 10 . 2024

## திரு நல்லையா பத்மநாதன்

(ஓய்வு பெற்ற பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை; தர்மகர்த்தாக்களில் ஒருவர் நுணாவில் மேற்கு மணங்குணாய் வீரகத்தி விநாயகர் ஆலயம்)

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நுணாவில், புத்தளம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா பத்மநாதன் அவர்கள் 17.10.2024 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நுணாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற நல்லையா-சிவபாக்கியம் தம்பதிகளின் புத்திரனும் நுணாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம்-இராஜபூபதி தம்பதிகளின் மருமகனும் புஸ்பவதி அவர்களின் ஆருயிர் கணவரும் கலைவாணி, விசாலினி சிந்து ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரேமகாந்தன் (கணக்காளர் UK) Dr.மயூரன் (சிரேஷ்ட விரிவுரையாளர் பொறியியற் பீடம், யாழ் பல்கலைக்கழகம், கிந்துஜன் (சிரேஷ்ட குடிசார் பொறியியலாளர், Mildura City Urban Council Australia) ஆகியோரின் அன்பு மாமனாரும் தருண், மவிரா, கிறிசி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் காலஞ்சென்ற கைலைநாதன் சற்குணநாதன், ஆனந்தேஸ்வரி அற்புதநாதன் ஆகியோரின் அருமைச்சகோதரரும் புஸ்பராணி, ஞானறஞ்சி, நவீந்திரன், சிவசோதி, சுதாதரணி, துளசி ஆகியோரின் மைத்துனரும் பாஸ்கரமூர்த்தி, யோகலிங்கம் ஆகியோரின் சகலனும், Dr.நிமலன், Dr.கஜந்தன், கஜிதா, சபேசன், சீதகன், சுதர்சன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் அசோக், கோபியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ரதன், லக்ஷமன், அஜானி, விசாகன், கல்யாணி, துயோசரணி, கவிஷன், பவதி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.10.2024) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் நுணாவில் மேற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 601 8719

(CR 43439) V-1

# மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 03 . 1961

இறப்பு 18 . 10 . 2024

## கந்தசாமி தயாபரன் (யாதவன்)

(ஓய்வுபெற்ற வவுனியா இ.போ.ச; யாழ் பல்கலைக்கழக ஊழியர்)

யாழ்ப்பாணம் மூளாயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி தயாபரன் அவர்கள் நேற்றுமுன்தினம் (18.10.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - கைலைநாயகி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலம்சென்ற தயாபரன் மான்விழி அவர்களின் அன்புக் கணவரும், லக்சிகா, சுவர்ணிகா, முரளிவாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நிலஷ்சன், கோபாலகிஷ்ணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம்சென்ற முரளீதரன், மற்றும் கிருபாகரன், காலம்சென்ற சுதாகரன், மற்றும் சுகந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அனுகீஷ், அனுக்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (20.10.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைகளுக்காக பித்தனை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
071 019 7421
077 040 5120

(CS/58497) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுசாதனப் பொருள்களால் தோல் புற்றுநோய் அபாயம்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 20

அழகுசாதனப் பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம் நரம்புகளில் நோய்கள் தாக்கும் அபாயம் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின்படி, அழகுசாதனப் பொருள்களில் இருக்கக்கூடிய பாதரசத்தின் அளவு ஒரு கிலோகிராம் ஒரு மில்லிகிராம் ஆகும். ஆனால் சருமத்தை வெண்மையாக்கும் அழகுசாதனப் பொருள்களில் அந்த வரம்புக்கு மேல் பாதரசம் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதன்காரணமாக தோல் புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன. இந்த நிலையில் இது போன்ற அழகுசாதனப் பொருள்களைப் பயன்படுத்தும்போது மிகவும் அவதானமாகச் செயற்படவேண்டும் என்றும் சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். (ச–இ)


### வீடு விற்பனைக்கு

15 பேர்ச் காணியில் மாதம் ஒரு லட்சம் ரூபா வாடகை பெறக்கூடிய பழைய வீடு தெகிவளையில் விற்பனைக்குண்டு.

**1 பேர்ச் - 49 லட்சம் ரூபா**

**071 484 0610**

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், கொழும்பில் வசிக்கும் 1982 ம் ஆண்டு பரணி நட்சத்திரத்தில் பிறந்த 7ல் செவ்வாயுள்ள கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு:- **077 696 4559**

(CS/56496) J-1

### நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

**077 138 7596, 071 999 9306**

### பணிப் பெண் தேவை

யாழ் நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு பணிப்பெண் தேவை.

சம்பளம்-25000/=

தொடர்பு: **077 327 6502**

### பெண் பயிற்சியாளர் தேவை

யாழ் நகரில் பிரபல்யமான பெண்கள் உடற்பயிற்சி நிலையத்திற்கு பெண் பயிற்சியாளர் தேவை.

உடனடியாக தொடர்பு கொள்ளவும்

தொடர்பு: **077 025 0339**

### வீடு வாடகைக்கு உண்டு

ராஜா கிறீம் ஹவுஸ் அருகில் கலட்டி சீனியர் வீதி பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.

தரகர்கள் தொடர்புகொள்ள வேண்டாம்

**077 434 8068**

### காணி விற்பனைக்கு உண்டு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு அண்மையாக கோப்பாய் மகாவித்தியாலயத்திற்கு பிற்புறமாக 11 பரப்பு காணி விற்பனைக்குண்டு

- நல்ல குடியிருப்புச் சூழல்
- நன்னீர் கிணறு
- இருபாலை கோண்டாவில் வீதி 100 m

உரிமையாளர் தொடர்புக்கு:

**077 993 4113, 077 349 9465**

### விற்பனைக்கு

2 மாதங்களே ஆன

- BAJAJ CT-100 2024 BJH-xxx, நீல நிற மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு (1st Owner மோட்டார் சைக்கிள்)
- மரத்தினாலான சோக்-கேஸ் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: **077 122 9019**


### அலுவலகக் கட்டடம் வாடகைக்குத் தேவை

கொக்குவில், கோண்டாவில் பகுதியில் காங்கேசன்துறை வீதிக்கு அண்மையாக 20 ஊழியர்கள் கொண்ட கணினி நிறுவனம் ஒன்றிற்கு வாகனத் தரிப்பிடத்துடன் அலுவலக இடம் வாடகைக்குத் தேவை.

**077 316 3530**


## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 02 . 1954



இறப்பு 18 . 10 . 2024

**கணபதிப்பிள்ளை தருமலிங்கம்**

நீர்வேலி தெற்கு அரசகேசரி பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தருமலிங்கம் கடந்த 18.10.2024 அன்று அமரத்துவம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற மூத்ததம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், உமாவின் பாசமிகு கணவரும், வைதேகி (கனடா), நிஷாந்தினி (கனடா), ஜானகி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கஜன் (கனடா), டர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிஷானி, கிஷாந் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, அரசகேசரி, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அரசகுமார், சகுந்தலா, மகேந்திரராஜா ஆகியோரின் மைத்துனரும், ஜெயசுதன் (கனடா), காலஞ்சென்ற ஜெயசுதா, பவித்திரா (கனடா) ஆகியோரின் மாமனாரும், பிருசாளினியின் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), சித்தப்பாவும், பத்மலோஜினி, முரளிதரன், லிங்கேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.10.2024) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 14…A-1)

## மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 08 . 1952



இறப்பு 17 . 10 . 2024

**குணரத்தினசிங்கம் சிவானந்தசிங்கம்**

**(Soil Research officer)**

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுருவில், Scarborough கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தின சிங்கம் சிவானந்த சிங்கம் கடந்த 17.10.2024 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்தியர் குணரத்தின சிங்கம் (JP) - செல்லம்மா தம்பதியரின் ஏக புத்திரனும், சுருவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவகுரு - தேவஞானி (தெய்வானை) தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயநிதியின் அன்புக் கணவரும், சஜீவன், Dr. அகன்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுஜந்தன், நிலுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், டெஸ்ரின், அமீரா ஆகியோரின் அன்புப் பாட்டனும், விஜயலட்சுமியின் (ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர்) அன்புச் சகோதரனும், முருகையா, காலஞ்சென்ற கலாநிதி குலசிங்கம், சிவகுமார், குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அபிராமி-அஜந்தனின் தாய் மாமனும், மனோகரன், திருமதி திருச்செல்வத்தின் பெறா மகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.10.2024) ஞாயிற்றுக்கிழமை 5.30 PM - 9.00 PM மணிக்கு Chapel Redge Funeral Home & Cremation Centre, 8911 Woodbine Ave, Markham, ON L3R5G1, Canada பார்வை வைக்கப்பட்டு, நாளை (21.10.2024) திங்கட்கிழமை 10.30 AM - 2.00 PM மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திருமதி விஜயலட்சுமி முருகையா (சகோதரி)**
**தம்பையா வீதி, கல்வயல், சாவகச்சேரி.**
**T.P:077 300 2515**

(CS 1654) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆளுமைமிக்கவர்களை தமிழர் தேர்ந்தெடுக்க வேண்டும்

## சுயேச்சையாக போட்டியிடும் சட்டத்தரணி கமலரூபன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 20

**தமிழ் மக்களுடைய ஒட்டுமொத்த பிரச்சினைகளும் தீர்க்கப்படுவதற்கு, அவர்களுக்காக தெற்கில் பேரம் பேசுகின்ற தமிழ்க் தேசியக் கொள்கை கொண்ட, புதிய ஆளுமைமிக்கவர்களின் வருகையே இப்போது தேவை- இவ்வாறு யாழ்.ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சுயேச்சையாக ஊஞ்சல் சின்னத்தில் களமிறங்கியுள்ள சட்டத்தரணி ஈ.எஸ்.பி.என். கமலரூபன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல கட்சிகள் எனக்கு ஆசனம் வழங்கத் தயாராக இருந்தன. ஆனால் எனது அரசியல் அறவழியாக இருக்க வேண்டும் என்பதால் தான் சுயேச்சையாக இறங்கியுள்ளேன்.

என்னுடைய தனித்துவமான செயற்பாடுகளை, கருத்துகளை அல்லது கொள்கைகளை தமிழ் மக்களிடையே காண்பிப்பதற்காகவே இந்தப் பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

கடந்த 2023ஆம் ஆண்டு நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட இருந்தேன். எனது இலக்கு , உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு உள்ளூராட்சி உறுப்பினரான பின்னர் மக்கள் சேவைகளை செய்த பின்னர் 2024 அல்லது 2025 ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்றத் தேர்தல் வரும் போது அதில் மக்கள் அறிந்த வேட்பாளராக களமிறங்க இருந்தேன். அது துரதிர்ஷ்ட வசமாக உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அனைத்துப் பிரச்சினைகளும் தீர வேண்டுமானால் தமிழ் மக்கள் சார்ந்து பேரம் பேசக் கூடியவர்கள் தேசியம் உள்ளடங்கலான புதிய கொள்கைகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அதற்கமைய தமிழ் மக்கள் இம்முறை புதிய முகங்களுக்கும், இளையவர்களுக்கும் வாக்களித்து அவர்களை நாடாளுமன்றம் அனுப்பவேண்டும் - என்றார். (ச-20)



## தமிழ் மக்கள் கூட்டணி தேர்தல் விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம், ஒக். 20

தமிழ் மக்கள் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.


கட்சியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை கட்சியின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர் வி.மணிவண்ணன் பெற்றுக்கொண்டார். இதன் போது வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-26,20)



## ஆயர் இல்லத்தின் ஆசியுடன் பிரசாத்தின் பரப்புரை ஆரம்பம்

மன்னார், ஒக். 20

வன்னி மாவட்டத்தில் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் சோமநாதன் பிரசாத் தனது குழுவினருடன் மன்னார் ஆயர் இல்லத்துக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சென்று மன்னார் மறைமாவட்ட ஆயர்இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை சந்தித்து ஆசிபெற்றார். இதன் போது அருட்தந்தை விக்டர்சோசை அடிகளாரையும் ஆயர் இல்லத்தில் சந்தித்து ஆசி பெற்ற வேட்பாளர் சோமநாதன் பிரசாத் தனது தேர்தல் பரப்புரைகளை கிராமங்கள் நோக்கி ஆரம்பித்தார். (ஒ-56)



## காயங்களுடன் இருந்தவர் மருத்துவமனையில் சேர்ப்பு

சாவகச்சேரி, ஒக்.20

கேரதீவு சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் காயங்களுடன் வீதியில் காணப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை நடந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. அதிகாலை வீதியால் சென்றவர்கள் அவரை வாகனத்தில் ஏற்றி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒப்படைத்தனர். குறித்த நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் எனவும், சாவகச்சேரி பொலிஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரி-131)

# சிதைவுற்ற நிலையில் பாலங்கள்; அடிக்கடி ஏற்படும் விபத்துகள்

## புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக்.20

முல்லைத்தீவு பரந்தன் ஏ -35 வீதியில் உள்ள வட்டுவாகல் பாலம் மற்றும் புளியம்பொக்கனை 10 ஆம் கட்டை பகுதியிலுள்ள பாலம் ஆகிய இரு பாலங்களும் பல ஆண்டுகளாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதனால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதுடன் உயிரிழப்புகளும் இடம்பெற்று வருவதாக அந்தப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வட்டுவாகல் பாலம் கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்னரான யுத்தம் மற்றும் 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தம் என்பவற்றால் கடுமையான சேதத்துக்கு உள்ளாகியது. தற்போது சிறுசிறு திருத்த வேலைகள் செய்யப்பட்டு போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பாலத்தின் புனரமைப்புப் பணிகளின் அவசியம் குறித்து கடந்த காலங்களில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் மற்றும் மாகாண சபை கலந்துரையாடல்களில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதற்கான அமைச்சரவைத் தீர்மானங்களும் கொண்டுவரப்பட்ட போதும் அதனை அமைப்பதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

பாலத்தின் பல இடங்களில் உடைவுகள் ஏற்பட்டு ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன. இதேபோன்று புளியம்பொக்கனை சந்திக்கு அண்மித்த பகுதியிலுள்ள பாலமானது கடந்த 2021 ஆம் ஆண்டில் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதன் பணிகளும் இன்றுவரை நிறைவடையாமல் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் குறித்த பாலங்களில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. குறிப்பாக தற்காலிக பாலத்தின் இரு பகுதிகளிலும் 15 க்கும் மேற்பட்ட விபத்துகள் ஏற்பட்டுள்ளதுடன் இரண்டு உயிரிழப்புகளும் நிகழ்ந்துள்ளன.

எனவே, ஏ -9 வீதிக்கு அடுத்தபடியான போக்குவரத்து பாதையாகவும் வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைக்கும் போக்குவரத்து பாதையாகவும் உள்ள இந்த வீதியிலுள்ள இருபாலங்களையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-25-113)



## வல்லையில் கார் விபத்து

யாழ். ஒக். 20

வல்லை மண்டான் சந்தியில் கார் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடந்துள்ளது.

வீதியால் பயணித்த கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ச-100)

## இளம் பெண்ணின் காதை வெட்டிய கணவன்

சாவகச்சேரி, ஒக்.20

இளம்பெண் ஒருவர் காது வெட்டப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த குடும்பப் பெண்ணொருவரே சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். விசாரணையின்போது தனது கணவனே காதை வெட்டியதாகத் தெரிவித்தார். மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அவர் மாற்றப்பட்டார். (ஒ-45-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கைத் தட்டுப்பாட்டால் எகிறும் தேங்காய் விலை

## வரும் நாள்களில் ரூ.200 ஐ எட்டுமென தகவல்

**கொழும்பு, ஒக். 20**

**நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான கால நிலை காரணமாக தேங்காய் உற்பத்தி உயர் மட்டத்தில் காணப்படும் போதிலும், தேங்காய்க்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தி தேங்காய் விலையை செயற்கையாக அதிகரிக்கச் செய்யும் மோசடி ஒன்று இடம்பெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

நாட்டில் தேங்காய் ஒன்றின் விலை 200 ரூபாவாக அதிகரிக்கும் அபாயமுள்ளதாக சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நாளகளில் சந்தையில் தேங்காய் ஒன்றின் விலை 160 ரூபா வரை அதிகரித்துள்ளது.

நாட்டில் உற்பத்தியாகும் தேங்காயில், கணிசமான அளவு தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்ற நிலையில் ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் தயாரிக்க பத்து தேங்காய் தேவைப்படுகின்றது.

தேங்காய் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காக அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான தோட்டங்களில் உள்ள தேங்காய்களை நகரப் பகுதிகளுக்கு கொண்டு வந்து விற்பனை செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் அண்மையில் தெரிவித்தார்.

இருப்பினும் குறித்த திட்டம் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# இடமாற்றங்கள் இப்போதில்லை

கொழும்பு, ஒக். 20

ஒரு சில பொலிஸ் உயரதிகாரிகளை இடமாற்றம் செய்ய வேண்டும் என்ற பதில் பொலிஸ்மா அதிபரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை தேசிய பொலிஸ் ஆணைக்குழு நிராகரித்துள்ளது.

பொதுத்தேர்தல் முடியும் வரை எதுவித இடமாற்றங்களையும் செய்ய முடியாது எனவும் பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-6)




# வணிக மேம்பாட்டு நிர்வாகி
(யாழ்ப்பாணம்)

**BUSINESS DEVELOPMENT EXECUTIVE (JAFFNA)**

இலங்கையின் முன்னணி மற்றும் மிகப்பெரிய நிதி மேலாண்மை நிறுவனத்தில் வேலைவாய்ப்பு!

இந்த வேலையில் வெற்றியடைய, நீங்கள் பின்வரும் தகுதிகளை பூர்த்தி செய்ய வேண்டும்:

- வயது 25க்கு குறைவாக இருக்க வேண்டும்.
- G.C.E. O/L மற்றும் G.C.E. A/L தேர்வுகளை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும்.
- முழு அல்லது பகுதி கல்வி அல்லது தொழில்முறை தகுதிகள் (CIM/SLIM) கூடுதல் நன்மையாக கருதப்படும்.
- வணிக இலக்குகளை (Business Objective) அடைய வெளிக்குச் சென்று வேலை செய்வதில் ஆர்வம் கொண்டவராக இருக்க வேண்டும்.
- ஒதுக்கப்பட்ட காலப்பகுதியில் கொடுக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கான இருக்க வேண்டும்.
- வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் இலக்குகளை புரிந்து நிதி ஆலோசனைகளை வழங்கும் திறனும் வேண்டும்.
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சிறப்பான எழுதுதல் மற்றும் தொடர்பு திறன்களுடன் இருக்க வேண்டும்.
- பாடசாலை முடித்தவர்களுக்கு பயிற்சி வணிக மேம்பாட்டு நிர்வாகியாக (Trainee Business Development Executive) சேர வாய்ப்பு வழங்கப்படும்.
- தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள் கவர்ச்சிகரமான ஊதிய தொகுப்புகளுடன் பயனுள்ள தொழில்வாழ்க்கைக்காக முன்நோக்கி எதிர்பார்க்கலாம்.

உங்கள் சுயவிவரத்தை (CV) careers@ndbinvestors.com க்கு அனுப்புங்கள்.

NDB Wealth Management


தமிழரசுக்கட்சியின்

# வன்னி வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு

வவுனியா,ஒக்.20

இலங்கை தமிழரசுக்கட்சியின் வன்னிமாவட்ட வேட்பாளர் அறிமுகநிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

நா.சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா,மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எம்.பி.நடராஜா மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். வன்னிமாவட்டத்தில் இம்முறை தமிழரசுக்கட்சி சார்பாக, முன்னாள் மாகாணசபை உறுப்பினர், து. ரவிகரன், வைத்தியர் ப.சத்தியலிங்கம்,ஆசிரியர் கா. திருமகன், சமூக செயற்பாட்டாளர் தே. சிவானந்தராசா, ஆசிரியர் பா. கலைதேவன், விரிவுரையாளர் ந. ரவீந்திரகுமார், ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் வ.கமலேஸ்வரன், சட்டத்தரணி செ. டினேசன், சட்டத்துறை மாணவி அ. கலீபா ஹலிஸ்ராஆகியோர் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-110)






# நிமலராஜனின் நினைவுதினம்!

வவுனியா, ஒக்.20

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 24ஆவது நினைவுதினம் வவுனியா ஊடக அமையை அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது நிமலராஜனின் உருவப்படத்துக்கு நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் வவுனியா ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர். (ஒ-ரி-110)




# நிமலராஜனுக்கு ஊடக இல்லத்தில் அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஒக்.20

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 24ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் நிமலராஜனின் திருவுருவப்படத்துக்கு சுடரேற்றி, மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஒ-ரி-100)

# மின் கட்டணத்தை குறைக்க முடியும்!

இலங்கை மின்சார சபையின் பொறுப்பற்ற நடவடிக்கையினால் ஒக்ரோபர் முதலாம் திகதி இடம்பெற வேண்டிய மின் கட்டண திருத்தம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என ஐக்கிய கூட்டமைப்பு தொழிற்சங்க அமைப்பின் அழைப்பாளர் ஆனந்த பாலித குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார். திருத்தப்பட வேண்டிய மின்சாரக் கட்டணம் தொடர்பான தரவுகளை இது வரை மின்சாரசபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பவில்லை எனவும் ஆனந்த பாலித சுட்டிக்காட்டியுள்ளார். தற்போது மின்சாரசபையின் நிகர லாபம் 155 பில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளது. குறைந்த பட்சம் 45 சதவீத மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கமுடியும். அந்தச் சாதகத்தை மக்களுக்கு வழங்கச் சொல்கிறோம்-என்றார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# தேசிய மக்கள் சக்தி அலுவலகம் திறப்பு

மன்னார், ஒக். 20

மன்னார் பேசாலையில் கடந்த வியாழக்கிழமை தேசிய மக்கள் சக்தி உப அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தைத் தேசிய மக்கள் சக்தியின் மன்னார் மாவட்ட வேட்பாளர்கள் அன்ரன் கமிலஸ் மற்றும் இரா மையா ராதாகிருஸ்ணன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். இக்கூட்டத்தில் மன்னார் மாவட்ட வேட்பாளர் களின் அறிமுகவுரை இடம்பெற்றதோடு. சமகாலத்தில் மன்னார்த்தீவுப் பகுதியில் மக்கள் பாரியளவில் முகம் கொடுத்துவரும் கனியவள மண்ணகழ்வு மற்றும் காற்றா லைப் பிரச்சினைகள் மக்களால் முன்வைக்கப்பட்டன.

இதன் போது புதிய ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகள் தங்களுக்கு மிகவும் திருப்தியளிப்பதாகவும் முக்கியமாக ஊழலற்ற அரசாங்கத்தை உருவாக்க முனைவது தங்க ளுக்கு மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாகவும் எனவே இந்த விடயத்தையும் அவர் கருத்திற் கொண்டு மன்னார் மக்க ளுக்காக இந்தக் கனிய மண்ணகழ்வு மற்றும் காற்றா லைத் திட்டங்களை நிறுத்துவார் என்று தாங்கள் நம்புவதா கவும் மக்கள் தெரிவித்தனர். (ஒ-60)

# 10 கிலோ ஐஸ்டன் கைது

கொழும்பு, ஒக். 20



மலேசியாவிலிருந்து வருகை தந்த இலங்கையர் ஒருவர் 10 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார். இதன் இலங்கை மதிப்பு 250 மில்லியன் ரூபா என சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கோலாலம்பூரிலிருந்து வருகைத்தந்த பயணி ஒருவரின் பயணப் பொதியில் இருந்தே இவை மீட்கப்பட்டுள்ளன. (ஒ-இ)




# மதுபானம் வழங்கி பரப்புரை தமிழரசு மீது குற்றச்சாட்டு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் ஒருவர் தமிழ் இளைஞர்களுக்கு மதுபானம் கொடுத்து தமக்கு ஆதரவாக பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றார் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. தினமும் இரவு நேரங்களில் தமிழ்க் கிராமங்களுக்குச் சென்று 20, வயதுக்கும் 30, வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களை கடற்கரைக்கு அழைத்துச் சென்று மதுபானமும், கொத்து றொட்டியும் வழங்கி வீட்டுச் சின்னத்துக்கும் தமது இலக்கத்துக்கும் பரப்புரை செய்யுமாறு தூண்டி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஒ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு**

பப்பாளி காய்கள் (பப்பாக்காய்கள்)/பழங்கள் மொத்தமாக விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 993 8348

**காவல் வேலைக்கு ஆள் தேவை**

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கிவரும் தொழிற்சாலை ஒன்றிற்கு பகல் மற்றும் இரவு நேர கடமைக்கு ஆள் தேவை

தகமை

- 40 வயதிற்கு உட்பட்டவர்கள்
- தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

தொடர்பு: 077 777 5068, 077 774 3578

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, புங்கன்குளம் வீதியில் ஈச்சமோட்டைக்கு அண்மையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

074 141 0806, 006 142 154 4878

Mail - Packicool@hotmail.com

**வாகனம் விற்பனைக்கு உண்டு**

NOMADE II மொடல் (பஜிரோ) கார் விற்பனைக்கு உண்டு. NE KT - XXXX விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS/1653) J-1

077 773 2214

**க.பொ.த உயர்தரம் - 2026 ற்கான அனுமதி**

எமது உடுவில் மகளிர் கல்லூரியின் க.பொ.த உயர்தரம் - 2026 ற்கான புதிய மாணவர் அனுமதி தமிழ், ஆங்கிலமொழி மூலமான கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்.

**அனுமதிகளை நாளை முதல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

**விண்ணப்ப முடிவுத் திகதி - 25.10.2024**

அதிபர்

(CR/43438) J-1

# எமது உரிமையை வெல்வதற்கு ஒரே கோட்பாட்டின் கீழ் திரள்வீர்

## ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், ஒக். 20**

**தென்னிலங்கைகட்சிகளும் அரசியல் வாதிகளும் தங்களது நிகழ்ச்சி நிரல்களை தமிழர் பகுதிகளில் மிக நிதானமாக நகர்த்தி வருகின்றனர்.**



அவர்களுக்கு வசைபாடுவதற்கும் அவர்களுடன் சேர்ந்து தமிழர்களின் வரலாறுகளை திரிவுபடுத்த துணைபோவதற்கும் ஒரு கூட்டம் இருக்கின்றது என்று சனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மக்கள் காலம் காலமாக சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இந்தத் துயரநிலை தொடர்ந்தும் நீடிக்க முடியாது. ஆகவே நாம் அனைவரும் குறை கூறுபவர்களாக இருக்காமல் எமது மக்களின் குறைகளையும் வேதனைகளையும் எப்படித் தீர்க்கலாம் என்பது பற்றி நிதானமாக முடிவெடுக்க வேண்டியவர்களாக மாறவேண்டும். இன்று நாம் அனைவரும் ஒரு இக்கட்டான காலகட்டத்தில் இருக்கின்றோம். எங்களுடைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றுமையின்மை என்பது எமது மக்களுக்கான மிகப்பெரும் சாபக்கேடாக மாறியிருக்கின்றது. இந்தக் கொடிய நிலை ஆட்சியாளர்களுக்கும் தென்னிலங்கை பேரினவாதக் கட்சிகளுக்கும் ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

எனவே தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் கட்சி ரீதியாக இல்லாவிட்டாலும் கொள்கை ரீதியாக ஒன்றுபடுவது தவிர்க்க முடியாததொன்றாகும். ஆகவே இங்கு நான் முக்கியமாக கூற முற்படுவது, சில தமிழ்த் தேசியக் கட்சிகள் காணி, பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட மாகாண சபை முறைமையை ஏற்கத் தயார் என்கின்றனர். சில தமிழ்த் தேசியக் கட்சிகள் சமஷ்டி தான் தமிழ் மக்களுக்கான தீர்வு என்கின்றனர். இதுதான் எங்களிடம் உள்ள வேற்றுமை. இதிலிருந்து நாம் விடுபடுகின்ற பட்சத்தில் தான் எம் இனத்துக்கான விடுதலை சாத்தியமாகும் - என்றார். (ம-இ)

**1ம் நாள் நினைவு**



தோற்றம் : 23.06.1952 மறைவு : 12.11.2022

**அமரர் கந்தையா தவபாலசந்திரன்**

**(பேக்கரி ராசன்-செல்வம் பேக்கரி))**

திதி: தேய்பிறை சதுர்த்தி

மண்ணுலகில் பிறந்து மண்ணுலகை வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்டு பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
எம்முயிர்த் தெய்வமே!
விண்ணுலகம் சென்று இன்று ஓராண்டு ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் எம் நெஞ்சை விட்டகலவில்லை
நீங்காத நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சோளங்கன், கரணவாய் மேற்கு கரவெட்டி

இவ்வண்ணம், குடும்பத்தினர்.

**ES Printers**

**உங்கள் எண்ணங்களை அச்சிட்டு வெளியிட எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்**

தேர்தல் பிரசாரங்கள் தொடர்பான சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், நாட்காட்டிகள் (Pocket Calendar), பிரசாரப் பதாகைகள் (Banner), போன்றவற்றை நேர்த்தியாகவும், உரிய நேரத்திலும் உங்களுக்கு அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.




தொடர்புகளுக்கு:-

**ES Printers**

No: 347 Kasthuriyar Road, jaffna

070 356 7811 / 077 120 9985

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கடனைக்...

நாடாளுமன்றத்தின் நிதி அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பிரதான குழுவான கோப் குழுவின் முன்னாள் தலைவர் என்ற ரீதியில் ஹர்ஷ டி சில்வாவின் கருத்து மிக முக்கியத்துவம் மிக்கதாகப் பார்க்கப்படுகின்றது.

ஹர்ஷ டி சில்வா மேலும் தெரிவித்ததாவது:-

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட அரச நிதி முகாமைத்துவ சட்டத்தை எதிர்த்த ஜே.வி.பி. இன்று அந்த சட்டத்துக்கமையவே செயற்பட்டு வருகிறது. நல்லாட்சி அரசாங்கத்திலேயே அதிகளவான கடன் பெறப்பட்டதாக அன்று குற்றஞ்சுமத்தப்பட்டபோதிலும், அதனை விட அதிகக் கடனைப் பெற வேண்டிய சூழ்நிலைக்கு இன்றைய அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

பெற்ற கடனை மீளச் செலுத்துவதற்காக வாரத்துக்கொரு முறை புதிய கடனைப் பெறவேண்டும் என்ற யதார்த்தத்தை தற்போது ஜே.வி.பி. உணர்ந்துள்ளது. இதன் விளைவாக, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் தொடர்ச்சியாக கடன் பெற்றுக்கொண்டிருக்கிறது. அரசியலுக்கு அப்பால் இதற்கான காரணிகள் குறித்து அவதானம் செலுத்தவேண்டியிருக்கிறது. அரசாங்கத்துக்கு அன்றாடப் பணிகளுக்கு நிதி தேவைப்பாடு காணப்படுகிறது. அதனை எங்கிருந்து பெற்றுக் கொள்வது? அதற்கு இரு பிரதான வழிமுறைகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று வரி உள்ளிட்ட அரச வருமானத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் திறைசேரி கணக்கில் காணப்படும் நிதியாகும். இரண்டாவது கடன் பெற்றுக் கொள்ளலாகும்.

திறைசேரியில் மேலதிக அல்லது மிகையான நிதி காணப்படுமானால், கடனை மீளச் செலுத்துவதற்காக அதனைப் பயன்படுத்த முடியும். மிகை நிதி என்பது அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் செலவுகளைக் கழித்த பின்னர், எஞ்சும் தொகையில் வட்டியையும் குறைத்த பின்னர் மீதப்படும் தொகையாகும்.

மிகை நிதியானது தேசிய உற்பத்தி வருமானத்துக்கு சமாந்தரமாக 2.3 சதவீதமாகப் பேணப்படும் என்று கடந்த அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டை எட்டியது. எனவே, இந்த மிகை நிதியானது கடந்த ஆண்டும் இவ்வாண்டும் அதிகாரிகளால் முகாமை செய்யப்பட்டு வருகிறது. எனவே, பெற்ற கடனை மீளச் செலுத்தும்போது அந்த மிகை நிதியில் ஒரு தொகை பயன்படுத்தப்படும்.

கடுமையான அரச நிதி ஒழுக்கத்தினால் தற்போது மிகை நிதி காணப்படுகிறது. இதற்காக அரச நிதி முகாமைத்துவச் சட்டம் கடந்த அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அன்று எதிர்க்கட்சி என்ற ரீதியில் அந்த சட்டத்துக்கு நாம் ஒத்துழைப்பை வழங்கினோம். ஆனால், அன்று அதனை எதிர்த்த ஜே.வி.பி., இன்று அந்தச் சட்டத்துக்கமையவே மிகை நிதியைப் பேணி வருகிறது. புதிதாகக் கடன்களை வாங்கிக் குவிக்கின்றது - என்றார். (அ-ம-இ)

## ஜனாதிபதி...

24ஆம் திகதி முதல் ஒரு மாதகாலத்துக்கு இலங்கையின் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் பொது ஒழுங்கைப் பேணுவதற்காக இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் அனைத்து உறுப்பினர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கே மனித உரிமைகள் ஆணைக்குழு தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

அரசாங்கமொன்றால் நிர்வாகம் சார்ந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் போது, அவை சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கும், தராதரங்களுக்கும் ஏற்றவாறு அமைவதை உறுதிப்படுத்தும் வகையிலான பரிந்துரைகளை அரசாங்கத்திடம் முன்வைப்பதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அந்த அதிகாரத்தின் அடிப்படையில், தங்களின் செப்ரெம்பர் 24ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலை மறுபரிசீலனைக்கு உட்படுத்துமாறு கோருவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

ஏதேனுமொரு பிரதேசத்தில் வசிக்கும் பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிக்கக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டாலோ அல்லது ஏற்படவிருக்கும் சந்தர்ப்பங்களிலோ, அதனைக் கையாள்வதற்கு அந்தப் பிரதேசத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பொலிஸார் போதுமானளவில் இல்லை என ஜனாதிபதி கருதும் பட்சத்திலேயே படையினரைப் பாதுகாப்புக்கு அழைக்கலாம். எனவே இந்த அளவுகோல்கள் குறித்து நீங்கள் விசேட கவனம் செலுத்தவேண்டும் என்றும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ம)

## உளழல்...

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் தங்காலையில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"2025ஆம் ஆண்டு பெப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படும். அரசதுறையினரின் சம்பளத்தை அதிகரிப்பது, பாடசாலை மாணவர்களுக்குக் கொடுப்பனவு வழங்குவது, பின்தங்கிய மற்றும் சிறப்புத் தேவையுடைய சமூகங்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிப்பது ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படும்.

16 சமையல்காரர்கள், 163 பாதுகாப்புப் பணியாளர்கள், 20க்கும் மேற்பட்ட வாகனங்கள் உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க விடுத்த கோரிக்கையை நான் நிராகரித்துள்ளேன். தற்போதைய அரச விதிமுறைகளின்படி, முன்னாள் ஜனாதிபதிக்கு மூன்று வாகனங்கள் மட்டுமே வழங்கப்படும். முன்னாள் ஜனாதிபதிகள் பொது நிதி மூலம் பராமரிக்கப்படுவதைத் தடுக்க புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும். முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த ராஜபக்ச ஆகியோரின் இல்லங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு அம்புலன்ஸ் வாகனங்கள் மீளப்பெறப்பட்டுள்ளன" - என்றார்.

(அ-ம)

## விபத்தில்...

போது நேற்று உயிரிழந்துள்ளார். பஞ்சாட்சரம் மௌதீஸ்வரன் (வயது-45) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 11ஆம் திகதி வேரவிலில் இருந்து முழங்காவில் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது முழங்காவில் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக திடீரென மோட்டார் சைக்கிளை வலதுபக்கமாக திருப்ப முற்பட்டபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

படுகாயங்களுக்கு உள்ளானவர் உடனடியாக முழங்காவில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அதன் பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில் சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-100)

## வீதிப்...

வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரின் நகர்வுகளையும், செயற்பாடுகளையும் கண்காணிக்கும் விதமாகவும், சேவையைப் பரவலாக்கம் செய்யும் வகையிலும், கடமைநேரத் துஷ்பிரயோகங்களைத் தவிர்க்கும் வகையிலும் இந்தத் திட்டம் அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதிக் கண்காணிப்புப் பொலிஸாரின் நகர்வுகள் மற்றும் அவர்களின் இட அமைவுகள் என்பவற்றை அலுவலகத்தில் அமர்ந்துகொண்டு திரையில் காணக்கூடியவாறு இந்தத் தொழில்நுட்பத் திட்டம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்துப் பொலிஸார் ஓர் இடத்திலேயே நீண்டநேரம் தரித்திருக்கின்றனர் என்றும், அவர்கள் வாகன நெருக்கடி மிகுந்த பகுதிகளில் சேவையில் ஈடுபடுவதில்லை எனவும் நீண்டகாலமாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். எனவே இந்த முறைப்பாட்டுக்கு நிரந்தரத் தீர்வைக் காணும் வகையில் இந்தத் திட்டம் அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## தேர்தல்...

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய சிறப்பு அதிதியாக இந்தச் செயலமர்வில் கலந்துகொண்டார். அவர் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான மேலதிக அறிவுறுத்தல்களை வழங்கினார்.

நிகழ்வில், சிரேஷ்ட வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரி.சி.ஏ.தனபால, பிரதிப் பொலிஸ்மா அதிபர் றுவான் குணசேகர, பிரதிப் பொலிஸ்மா அதிபர் சமந்த டி.சில்வா, மேலதிக மாவட்டச் செயலர் (காணி) க.சிறிமோகனன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.எல்.ஏ.சூர்ய பண்டார, பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.சந்தன ஹமகே, உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், முறைப்பாட்டு முகாமைத்துவப் பிரிவின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் உட்பட சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டார்கள். (அ-ம-26)

## பெண்ணின்...

கொள்ளையிடப்பட்டுள்ளது. மன்னா கண்டல் பகுதியில் குடும்பமாகப் பயணித்துக் கொண்டிருந்தபோதே, பிறிதொரு மோட்டார்சைக்கிளில் வந்த நபர் பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளார். இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-19)

## 26 ஆம்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

நாளை (இன்று) ஞாயிற்றுக்கிழமை இரவு அல்லது நாளைமறுதினம் (நாளை) திங்கட்கிழமை காலையில் வங்காள விரிகுடாவில் அந்தமான் தீவுகளுக்கு அண்மித்ததாகக் காற்றழுத்தத் தாழ்வுநிலை ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. இது எதிர்வரும் 22ஆம் திகதி ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக மாறி மேற்குத் திசையில் நகர்ந்து 25ஆம் திகதி புயலாக மாறி இந்தியாவின் புவனேஸ்வருக்கு அருகில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் புயலால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் தற்போதைய நிலையில் நேரடியாக எந்தப் பாதிப்புமில்லை. இதன் காரணமாக எதிர்வரும் 26ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்குக் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது சிறந்தது. அதேவேளை எதிர்வரும் நவம்பர் மாதத்திலும் மூன்று தாழமுக்க நிகழ்வுகள் தோன்றும் வாய்ப்புள்ளன. அதேவேளை நவம்பர் மாதத்தின் 18 நாட்கள் மழைநாட்களாக அமையக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இதனால் எதிர்வரும் நவம்பரில் அதிக மழை கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளன - என்றார். (அ-ம-66)

## ஓட்டோ...

தனியார் வங்கிக்கு முன்பாகத் தரித்து நின்றபோது, அங்கு வந்த மூவர் அந்த ஓட்டோ சாரதியைத் தாக்கி இந்தக் கொள்ளையில் ஈடுபட்டனர் என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சந்தேகநபர்களில் ஒருவரைக் கைது செய்துள்ளனர். இருவர் தப்பிச்சென்ற நிலையில், முள்ளியவளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ-ம-19)

## இந்திய...

இருந்து பயணிகள் அனைவரும் பத்திரமாக வெளியேற்றப்பட்டு சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. சில மணிநேர சோதனைகளின் பின்னர் விமானத்தில் வெடிகுண்டுகள் இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது. (அ-ம)

## மாவை...

பின்னர் அவருடைய உடல்நிலையில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாகவும், அச்சப்படும் வகையில் எதுவும் இல்லை என்றும் அவருடைய குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நீர்கசிவை தடுப்பதற்கு




உலகத்தரம்மிக்க கட்டட இரசாயனப் பொருட்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

**போலிகளைக்கண்டு ஏமாறவேண்டாம்**

MasterSeal- 540, பரலாஸ்ரிக்

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com
FINEX

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - காரைநகர் நவாலி வீதி செல்லும் பாதை 50M தூரத்தில் 16 அடி பாதையுடன் 20 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

**077 676 3409, 077 078 1359**

## மணமகள் தேவை

யாழ். R.C கனடா பிரஜாவுரிமையுடைய IT பட்டதாரி கனடாவில் தொழில் புரியும் 36 வயதுடைய குறுகிய காலத்தில் விவாகரத்துப் பெற்ற குழந்தைகள் அற்ற பெற்றோருடன் வசிக்கும் மணமகனுக்கு கனடாவில் மணமகள் தேவை.
இந்துக்களும் தொடர்பு கொள்ளலாம்.

(CS/56470) J-1

**+141 672 82281, +164 797 26250**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22 . 07 . 1944



மறைவு
31 . 10 . 2023

**அமரர் லயன் இராசையா இராமச்சந்திரன்**

**சமாதான நீதவான்,**
**ஓய்வுபெற்ற மருந்தாளர்,**
**உரிமையாளர் - மெடிகெயார் பாமசி, சுன்னாகம்**

**திதி : அபரபக்க திருதியை**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்திடம் சரணடைந்து ஓராண்டும் கடந்ததுவே
சிறந்த குடும்பத்தலைவனுக்கு இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய் எமக்கு என்றும்
வழிகாட்டியாய் எம் நினைவில் நீங்காது
நிலைத்து நிற்பீர்கள்.

உங்கள் நினைவுடன் வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS/56469) J-1

## பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

2026ல் நீங்களும் அமெரிக்காவில்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

**V2 Travels 0768226244**

## வாடகைக்குத் தேவை

எமது நிறுவனத்திற்கு 500 சதுர அடி அளவுடைய கட்டடத் தொகுதி வாடகைக்குத் தேவை. A9 வீதி, K.K.S. வீதி, பருத்தித்துறை வீதி, புலோலி வீதி போன்ற இடங்கள் விரும்பத்தக்கது.

077 929 5909, 077 888 7051, 011 700 6204

## காணி விற்பனைக்கு உண்டு

- யாழ்ப்பாணம் கைதடியில் 30 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு A9 வீதி முகப்புடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை
- 20 அடி பாதையுடன்

தொடர்புகளுக்கு:
**070 168 3354, 070 668 3354**

## ஆண் உதவியாளர் தேவை

தென் மாகாணத்தில் உள்ள பலசரக்கு கடை ஒன்றில் பணிபுரிவதற்கு ஆண் உதவியாளர் தேவை.
(Sales Assistant/ Worker)
**சம்பளம் : 60,000**

location :- S.A.W & Sons, Hambantota
Contact :- 0774803379

## நீதிபதிக்கு அவதூறு சந்தேகநபர் மறியலில்

கொழும்பு, ஒக். 20

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக கொழும்பில் சுவரொட்டி அச்சடித்து ஒட்டப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை, விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனாவெல, உத்தர விட்டார். (ஒ-இ)

## கணக்காளர் தேவை

ஆலயம் ஒன்றிற்கு கணக்காளர் இருவர் தேவை
**வயதெல்லை 50-65**

**077 674 5885**

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் printing shop ஒன்றிற்கு கணினி அறிவு உள்ள பெண் வேலையாட்கள் தேவை.

077 666 9950 , 076 356 6660

## கடை வாடகைக்கு

இணுவில் கே.கே.எஸ் வீதியில் உப்புமடம் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள கடை வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
**077 078 1087**

## பிராமணக் குருக்கள் தேவை

இருபாலை கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு ஆலயத்திற்குச் சொந்தமான வீட்டில் தங்கி இருந்து அம்பாளிற்கு மூன்றுகாலப் பூசை செய்வதற்கு பிரமாணக்குருக்கள் குடும்பமாகத் தேவை.

**தொடர்புகளுக்கு: 077 809 6181**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் உரும்பிராய் சிவகுல வீதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- உரும்பிராய் சந்தி 300 மீற்றர் தூரம்
- நல்ல சூழல் குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- தரகர் தேவையில்லை
- மருதனார் மடம் உரும்பிராய் செல்லும் காபற் வீதி 150 மீற்றர் தூரம்.

**தொடர்புகளுக்கு: 077 4683 354 077 2880 152**

(CS 1657) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

திருமதுகை யாகத் திறனிலார் செய்யும்
பெருமிதம் கண்டக் கடைத்தும் – எரிமண்டிக்
கானத் தலைப்பட்ட தீப்போல் கனலுமே,
மான முடையார் மனம்.


– நாலடியார்

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2055 ஐப்பசி 03 ஞாயிற்றுக்கிழமை (20.10.2024) சிகரம் :223

# காவு வாங்கக் காத்திருக்கும் சங்குப்பிட்டிப்பாலம்



பொறியியலாளர் சி.உருத்திரலிங்கம்





*(இந்தக் கட்டுரை 09.07.2021அன்று உதயனில் பிரசுரமான கட்டுரை. சங்குப்பிட்டிப் பாலத்தில் கறள் பிடித்திருப்பதால், அதனை சரியான முறைமைகள் ஊடாகச் சீர் செய்யாவிட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என அந்தக் கட்டுரையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அதனை வீதி அபிவிருத்தி அதிகாரசபை கண்டுகொள்ளவில்லை. மாறாக மேம்போக்கான வர்ணப்பூச்சுகளோடு அந்தப் பாலத்தின் அப்போதைய சேதங்களை பூசி மெழுகியிருந்தது. ஆனால் இப்போது பாலத்தில் பிடித்த கறள், இந்தக் கட்டுரையில் எதிர்வு கூறியதைப் போன்று புற்றுநோயாக வியாபித்து. கனரக வாகனங்களின் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளதோடு, வாகனங்களில் பயணிப்போரும் நடந்து சென்றே பாலத்தைக் கடக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டு, அவசர திருத்தப்பணிகள் நடைபெறத் தொடங்கியுள்ளன. இந்தத் திருத்தவேலைகளாவது உரியமுறைப்படி நடக்கவேண்டும் என்பதற்காக, காலப்பொருத்தம் கருதி இந்தக்கட்டுரை மீளப்பிரசுரமாகின்றது)*

யாழ்ப்பாண மாவட்டத்தையும். கிளிநொச்சி மாவட்டத்தையும் இணைக்கும் மிக முக்கியமான பாலமாக சங்குப்பிட்டிப் பாலம் இருக்கின்றது. ஏ - 9 கண்டி வீதிக்கு நிகராக, சங்குப்பிட்டிப் பாலம் அமைந்திருக்கும் ஏ - 32 வீதியூடாகவும் போக்குவரத்து நிகழ்கின்றது. கனரக வாகனங்களிலிருந்து அனைத்து வகையான வாகனங்களும் சங்குப்பிட்டிப் பாலத்தின் ஊடாகப் பயணிக்கின்றன. சாதாரணமாக நாள் ஒன்றுக்கு 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சங்குப்பிட்டிப் பாலத்தின் ஊடாக பயணிக்கும் நிலையில், அவர்களது உயிருக்கு உலைவைக்கும் நடவடிக்கைகளுக்அதிகாரிகள் துணைபோகின்றனரா என்ற சந்தேகம் எழுகின்றது.

சங்குப்பிட்டிப் பாலத்தில் ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பில் ஊடகங்களில் செய்தி வெளிவந்திருந்தது. அதன் பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள் அதனைச் சென்று பார்வையிட்டிருந்தனர்.

அதனைப் பார்வையிட்ட பின்னர், 'பாலத்தில் மிகப் பெரிய குறைகள் ஒன்றும் இல்லை. காணப்படும் குறைகளைப் புனரமைக்கும்படி பணிப்புரைகள் வழங்கப்பட்டு அவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மக்கள் பயப்படும் அளவுக்கு இது ஒரு பிரச்சினை இல்லை' எனவும் கூறப்பட்டுள்ளன. குற்றம் செய்தவனிடத்தே நீதியை வழங்கக் கோரும் போது இவ்வாறான கருத்துகள் வெளிப்படுவது ஒன்றும் ஆச்சரியப்படக் கூடியதல்ல.

இதேவேளை நீண்ட காலமாகப் பொறியியலாளராகப் பணியாற்றும் நான், பல்லாயிரம் மக்கள் பயணிக்கும் சங்குப்பிட்டிப் பாலத்தின் உண்மை நிலையை வெளிக் கொண்டு வருவதற்காக அதனை நேரில் சென்று பார்வையிட்டிருந்தேன்.

கடல் நீருள்ள பகுதிகளுக்கு - சுற்றுச் சூழலுக்கு சாதம் இல்லாத இடத்துக்கு எஃகுவினாலான (ஸ்டீல்) பாலம் பொருத்தமற்றது.

ஆனாலும் அதனைப் பயன்படுத்தி பாலம் அமைக்கப்பட்டதால், அதனை உரியமுறையில் பராமரிக்கவேண்டும். ஆனால் கடந்த காலங்களில் பாலம் உரிய முறையில் பராமரிக்கப்படவில்லை.

பாலத்தில் இரும்புக் கறள் தோன்றியுள்ளது. அதனை உளியினால் அகற்றி சாண்ட் பேப்பரால் அகற்றி, அரிப்பு எதிர்ப்பு வண்ணப் பூச்சு (அன்டிகுரொஸ் பெயின்ட்) அடித்து பூசி மெழுகினாலும் அந்தச் செயற்பாட்டை பூரண கறள் அகற்றும் செயற்பாடாகக் கருதமுடியாது.

பாலத்தின் உறுதிப்பாட்டு அதன் இரு முனைகளிலும் இணைக்கப்பட்டுள்ள தாங்கு தட்டிலேயே (பியரிங் பிளேட்ஸ்) உள்ளது. அது முக்கியமானது. இதுவும் எஃகுவினால் ஆனது. அதுவும் கறளுக்கு உள்ளாகி தனது சக்தியை இழந்து வருகின்றது.

புற்றுநோய் போன்ற இந்த துருப்பிடித்தல் என்ற வியாதியை கொத்தமல்லி ரசம் குடிப்பது போல வெறும் சாண்ட் பேப்பரைப் பாவித்து அகற்றமுடியாது.


ஆனாலும் தற்போது சங்குப்பிட்டிப் பாலத்துக்குச் செய்யப்பட்ட பரிகாரம் அரைகுறையானது. கறளை அகற்றாமல், அன்டிகுரொஸ் பெயின்ட் அடிப்பதால் எந்தப் பலனும் இல்லை.

கறள் அகற்றுவதற்கான முறைகள் உண்டு. அதற்குரிய திரவம் உண்டு. அது இங்கும் உள்ளது. கொழும்பில் சில வேளைகளில் மேம்பட்ட திரவம் இருக்கலாம். மக்கள் பிரதிநிதிகளாக அரசில் உள்ளவர்களை அதைக் கொழும்பிலிருந்து கொண்டு வந்து தரக் கூடியவர்கள்தான்.

கறளை முழுமையாக அகற்றி சாணை பிடித்ததன் பின்னர் வேதாளம் மீண்டும் மரத்தில் ஏறாவண்ணம் கறளினைத் தடுப்பதற்குப் பலவித தீந்தைகள் எமது சந்தையிலுண்டு. இன்னுமோர் முறையும் உண்டு. மணல் வீச்சு முறை என்று சொல்வார்கள்.

05

## 'பூசி மெழுகுவதால் பயனில்லை'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாந்தன்

# அரசியலில் இதெல்லாம் சகஜமில்லை!



வியட்நாமின் தந்தை என்று அழைக்கப்படும் ஹோசிமினின் வாக்கியம் ஒன்று உண்டு "மக்களிடம் செல்லுங்கள். மக்களுக்கு உண்மையைச் சொல்லுங்கள். மக்கள் உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தருவார்கள்" என்று.

மக்களுக்கு உண்மையைச் சொல்வதற்கு தமிழ் அரசியல்வாதிகளில் எத்தனை பேர் தயார்? கடந்த பல தசாப்தங்களில் தமிழ்க்கட்சிகளும் கட்சிகளின் தலைவர்களும் தமிழ்மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் எத்தனை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன? தமிழ்த்தேசியக் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில் கூறப்பட்ட விடயங்களில் எத்தனை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன? அவை ஏன் நிறைவேற்றப்படவில்லை? எல்லாப் பழியையும் சிங்கள- பௌத்த பேரினவாதத்தின் மீது சுமத்திவிட்டு தமிழ்த் தலைவர்கள் தங்கள் தோல்விகளுக்குப் பொறுப்புக்கூறாமல் தப்பி வந்திருக்கிறார்களா? தங்களால் முடியாமல்போன விடயங்களுக்காக யாராவது தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்டிருக்கிறார்களா? கடந்த பல தசாப்த காலமாக தமிழ் அரசியலில் பொறுப்புக் கூறாமை என்பது ஒரு பண்பாடாக வளர்ந்து விட்டது.

தலைமைத்துவம் என்பது வெற்றிக்கும் தோல்விக்கும் பொறுப்புக்கூறுவது. நல்லதுக்கும் கெட்டதுக்கும் பொறுப்புக் கூறுவது. வரவுக்கும் செலவுக்கும் பொறுப்புக் கூறுவது. ஆனால் தமிழ் அரசியலில் எத்தனை பேர் அவ்வாறு பொறுப்புக் கூறியிருக்கிறார்கள்? தமது தேர்தல் அறிக்கைகளுக்கு எத்தனை பேர் பொறுப்புக் கூறியிருக்கிறார்கள்? இந்த விடயத்தில் ஆயுதப் போராட்டத்தை தனியாக ஆராய வேண்டும். ஆனால் ஆயுதப் போராட்டத்துக்கு முன்னரும் பின்னருமான மிதவாத அரசியலை தொகுத்துப் பார்த்தால் எத்தனை தலைவர்கள் தமது தோல்விகளுக்குப் பொறுப்புக் கூறியிருக்கிறார்கள்?

உள்ளதில் பெரியதும் மூத்ததுமாகிய கட்சி தமிழரசுக் கட்சி. அதற்கு 'பெடரல் பார்ட்டி' என்றும் பெயர் உண்டு. கடந்த 74 ஆண்டுகளாக, தனது பெயரில் உள்ள பெடரலை அதாவது சமஷ்டியை ஏன் அடையமுடியவில்லை என்பதற்கு அந்தக் கட்சி தன் மக்களுக்கு எப்போதாவது பொறுப்புக் கூறியிருக்கிறதா? தன் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத செல்வநாயகம், அதற்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்காமல், மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னாரா?

1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றியது தமிழர் விடுதலைக் கூட்டணி. சில ஆண்டுகளிலேயே, 81ஆம்ஆண்டு மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல்களை நோக்கிச் சரணடைந்தது. அதற்கு அவர்கள் பொறுப்புக் கூறினார்களா? மன்னிப்புக் கேட்டார்களா?

நவீன தமிழரசியல் வரலாற்றில் தமிழ்மக்கள் ஆகக்கூடிய நாடாளுமன்ற ஆசனங்களை பெற்றிருந்த காலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தேர்தல் கேட்ட காலகட்டம் தான். 22 ஆசனங்கள் கிடைத்தன. ஆனால் இலங்கைத்தீவின் அரசியல் வரலாற்றில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் உச்சமாக இருந்த அக்காலகட்டத்தில்தான், 2009ஆம் ஆண்டின் முற்பகுதியில், மிகக்குறுகிய காலகட்டத்துக்குள் அதிக தொகை மக்கள், இன அழிப்புச் செய்யப்பட்டார்கள். அதாவது ஆகக்கூடுதலான ஆசனங்களை தமிழர்கள் பெற்றிருந்த ஒரு காலகட்டத்தில் தான், அதிக தொகை தமிழ்மக்கள் இனஅழிப்புச் செய்யப்பட்டார்கள். 22 ஆசனங்களினாலும் அந்த இனஅழிப்பைத் தடுக்க முடிய வில்லை. அது கூட்டமைப்பின் தோல்வியும்தான். அதற்கு கூட்டமைப்பு பொறுப்புக் கூறியதா?

2009க்குப்பின் கடந்த 15ஆண்டுகளிலும் தமிழ்க் கட்சிகள் தமது தேர்தல் அறிக்கைகளில் வெவ்வேறு வகைப்பட்ட வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றன. இவற்றில் எத்தனை நிறைவேற்றப்பட்டன? நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளுக்கு எந்தக் கட்சியாவது பொறுப்புக்கூறியதா? அவற்றை நிறைவேற்ற முடியாமல் போனதற்கு மன்னிப்புக் கேட்டதா?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது, தேசத்தைக் கட்டியெழுப்பும் வழியில் எதுவரை முன்னேறியுள்ளது? பரிகார நீதியை நோக்கி எதுவரை முன்னேறியுள்ளது? என்று தமிழ் மக்களுக்கு விளக்கம் கொடுக்குமா? இன அழிப்புக்கு எதிராக இலங்கை அரசைப் பொறுப்புக்கூற வைக்கும் விடயத்தில் ஏனைய கட்சிகளைவிட தான் நேர்மையாகவும் துணிச்சலாகவும் உண்மையாகவும் நடப்பதாகக் கூறும் முன்னணி, அந்த விடயத்தில் கடந்த 15 ஆண்டுகளில் எதுவரை முன்னேறியிருக்கிறது என்பதனை தமிழ் மக்களுக்கு எடுத்து கூறுமா? தன்னுடைய சமரசத்துக்கு இடமற்ற வெளியுறவுக் கொள்கை காரணமாக கடந்த 15 ஆண்டுகளில் தான் பெற்றுக்கொண்ட வெற்றிகளைக் குறித்து அந்தக்கட்சி தமிழ் மக்களுக்கு உண்மை நிலைவரத்தை எடுத்துக் கூறுமா?

எல்லாருமே தமிழ் மக்களின் மறதியின் மீதே தமது தேர்தல் வெற்றிகளை முதலீடு செய்கிறார்களா? ஆம் கடந்த 15 ஆண்டுகளாக மட்டுமல்ல, அதற்கு முன்னரும் பொறுப்புக்குக் கூறாமை என்பது தமிழரசியலில் ஒரு பண்பாடாகவே வளர்ந்து விட்டது. தமிழ்க்கட்சித் தலைவர்களில் பலர் தமது தவறுகளுக்கும் தோல்விகளுக்கும் இயலாமைகளுக்கும் மன்னிப்புக் கேட்டதில்லை. அதாவது பொறுப்புக் கூறியதில்லை.

ஆனால் கடந்த வாரம் தமிழ் மக்கள் பொதுச்சபையின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் ஊடகங்கள் முன்னிலையில் மக்களுக்கு உண்மையை கூறினார்கள்; பொறுப்புக் கூறினார்கள்.

தமிழ்மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பு ஏப்ரல் மாத கடைசியில் உருவாகியது. அது பின்னர் கட்சிகளோடு இணைந்து ஒரு பொதுக்கூட்டமைப்பை உருவாக்கியது. அப்போது கட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுவேட்பாளரை முன் நிறுத்தியது. பொது வேட்பாளர் தமிழரசியலில் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்ற ஒருவராக மேலெழுந்தார். அரசற்ற சிறிய இனம் ஒன்று அரசாங்கம் அறிவிக்கும் ஒரு தேர்தலை எப்படி வித்தியாசமாக படைப்புத்திறனோடு, விவேகமாக, கையாளமுடியும் என்பதற்கு பொதுவேட்பாளர் ஒரு முன்னுதாரணம். அரசற்ற மக்கள், அரசாங்கம் அறிவிக்கும் ஒரு தேர்தலை எப்படி வெற்றிகரமாகக் கையாண்டு தமது கூட்டு விருப்பத்தை வெளிப்படுத்தலாம் என்பதற்கும் அது ஒரு முன்னுதாரணம்.

ஆனால் அந்த வெற்றியைக் கொண்டாட முடியாத அளவுக்கு சில நாட்களிலேயே நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. தமிழ்மக்கள் பொதுச்சபைத் தேர்தலில் பங்குபற்றுவதில்லை என்று முடிவெடுத்தது. அதனால் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகித்த இரண்டு கட்சிகள் கட்டமைப்பிலிருந்து விலகின. விளைவாக பொதுக் கட்டமைப்பு செயலிழந்தது. தமிழ்மக்கள் பொதுச்சபையானது தொடர்ந்து பொதுக்கட்டமைப்பாக தேர்தலை எதிர்கொண்டிருக்கவேண்டும் என்ற விருப்பம் சங்குக்கு வாக்களித்த மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகின்றது. ஒரு வெற்றியை காட்டிய பொதுக்கட்டமைப்பு அடுத்த தேர்தலில் தங்களுக்கு வழிகாட்டத் தவறிவிட்டது என்று அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

தமிழ்மக்கள் பொதுச்சபைக்குள்ளும் இது தொடர்பாக வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. நாடாளுமன்றத் தேர்தலைக் கையாள வேண்டும் என்று ஒரு தரப்புக் கூறியது. ஆனால் தேர்தல்களை தொடர்ச்சியாக கையாள்வது ஒரு மக்கள் அமைப்பின் வேலை அல்ல என்று மற்றொரு தரப்புக் கூறியது. ஜனாதிபதித் தேர்தலை தேசத்தைத் திரட்டுவதற்கான ஒரு களமாகப் பயன்படுத்துவதே தமிழ் மக்கள் பொதுச்சபையின் இலக்காக இருந்தது. அதில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியும் பெற்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கான களநிலைவரம் அத்தகையது. ஆனால் நாடாளுமன்றத் தேர்தல் அத்தகையது அல்ல. அங்கே கட்சிகளும் சுயேச்சைகளும் விருப்பு வாக்குகளும் வாக்காளர்களை சிதறடிக்கும். அதாவது தேசத்தைச் சிதறடிக்கும். எனவே தேசத்தைச் சிதறடிக்கும் ஒரு தேர்தல் களத்தில் தாமும் இறங்கி மக்களைச் சிதறடிக்க முடியாது என்று பொதுச் சபைக்குள் ஒரு பிரிவு வாதிட்டது.

மக்கள் அமைப்பில் காணப்படும் கடற்றொழிலாளர் சங்கங்களும் விவசாய அமைப்புகளும் பாதிக்கப்பட்ட மக்களின் அமைப்புகளும் நாடாளுமன்றத் தேர்தலைக் கையாளவேண்டும் என்று கேட்டன. பொதுச்சபை குறைந்தபட்சம் சுயேச்சையாகவாவது இறங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டது. ஆனால் தேசத்தைக்கட்டி எழுப்புவது என்பது தேர்தல்களால் மட்டும் செய்யக்கூடிய ஒன்று அல்ல. ஆகக்கூடிய பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில்தான் ஆகப்பெரிய இன அழிப்பு இடம்பெற்றது. எனவே தேசத்தைக் கட்டியெழுப்புவது என்பது தேர்தல்களுக்கும் அப்பால் பரந்தகன்ற தளத்தில் பல்வேறு கட்டமைப்புகளுக்கூடாக செய்யப்படவேண்டும் என்று பொதுச்சபைக்குள் ஒரு பிரிவு வாதிட்டது. முடிவில் பொதுச்சபை தேர்தலில் பங்கெடுக்கவில்லை. அதனால் பொதுக் கட்டமைப்பும் செயலிழந்து போனது. பொதுச்சபை தேரைக் கொண்டு வந்து தெருவில் விட்டுவிட்டது என்று குற்றம் சாட்டப்பட்டது.

அது தவறு. ஜனாதிபதித் தேர்தல் என்ற தேரை இழுத்த தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு அந்த தேரை தேர் முட்டிக்குள்தான் கொண்டு வந்து நிறுத்தியது. எனவே தேர் தெருவில் நிற்கிறது என்ற வாதம் சரியல்ல. மாறாக தொடர்ந்து தேர்தல் திருவிழாக்களை எதிர்கொள்ள தமிழ்மக்கள் பொதுச்சபை தயாரில்லை என்பதுதான் உரிய விளக்கம் ஆகும்.

இது தொடர்பான இருதரப்பு விவாதங்களிலும் ஆழமான ஓர் உண்மை உண்டு. ஜனாதிபதித் தேர்தலை தமிழ்மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பு ஒரு தேர்தலாக அணுகவில்லை. அதற்குரிய அரசறிவியல் விளக்கத்தை அது கொண்டிருந்தது. ஆனால் அந்த விளக்கம் வாக்களித்த மக்களை முழுமையாகச் சென்றடையவில்லை. தமிழ்த் தேசிய வாக்காளர்கள் ஜனாதிபதி தேர்தலை ஒரு தேர்தலாகத்தான் பார்த்தார்கள். பெரும்பாலான வர்கள் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்கும் பொழுது தமிழ் வாக்கு தமிழருக்கு என்றுதான் சிந்தித்தார்கள். மாறாக தேர்தலை ஒரு தேர்தலாகக் கையாளாத களம் அது என்பது பெரும்பாலான வாக்காளர்களுக்கு விளங்கியிருக்கவில்லை. 50 நாட்களுக்குள் அந்த விளக்கத்தைக் கொடுக்கக்கூடிய சக்தி தமிழ் மக்கள் பொதுச்சபைக்கும் பொதுக் கட்டமைப்புக்கும் இருக்கவில்லை. எனவே வாக்காளர் மனோநிலை என்பது தொடர்ந்து தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டும்; கட்சிகளை ஒருங்கிணைக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு காணப்பட்டது.

அதற்குக் காரணம் கட்சிகள்தான். மக்கள் ஒரு தலைமைத்துவ வெற்றிடத்தை உணர்கிறார்கள். ஏதாவது ஒரு கூட்டு அல்லது யாராவது தலைவர்கள் வந்து தங்களுக்கு ஒரு புதிய வழியைக் காட்ட மாட்டார்களா என்று ஏக்கத்தோடு எதிர்பார்த்திருக்கிறார்கள். அதனால்தான் கலகக்காரனாக மேலெழுந்த ஒரு மருத்துவரை ஒருபகுதி மக்கள் ஆர்வத்தோடு பார்த்தார்கள். அதனால் தான் ஜே.வி.பி.யின் எழுச்சியை ஒருபகுதி மக்கள் ஆர்வத்தோடு பார்க்கிறார்கள். அதனால்தான் தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பும் தமிழ்மக்கள் பொதுச்சபையும் தொடர்ந்து தேர்தல்களில் ஈடுபடவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

மக்களுடைய அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றமுடியாமல் போனமைக்கு மக்கள் அமைப்பு மன்னிப்புக் கேட்டது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு ஊடகச் சந்திப்பில் மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள் அது தொடர்பாக விளக்கம் அளித்தார்கள்.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டதுபோல அவர்கள் மக்களுக்கு உண்மையைக் கூறினார்கள். பொது வாழ்வில் மக்களுக்கு உண்மையை கூறுவது மகிமையானது. அதற்கு ஒரு துணிச்சல்வேண்டும். அதற்கு ஒரு வாழ்க்கை முறை வேண்டும். பொது வாழ்வில் ஈடுபடும் பெரும்பாலான பிரமுகர்கள் மக்களுக்குப் பொறுப்புக் கூறுவதில்லை. தனது செயல்களுக்குப் பொறுப்புக்கூறும் துணிச்சல் மக்கள் அமைப்பிடம் உண்டு என்பதனால் அது நாடாளுமன்றத் தேர்தலைக் கையாளாமல் விட்டதற்கு மன்னிப்புக் கேட்டது. தேர்தலைக் கையாளாமல் விட்டதற்கு அரசறிவியல் விளக்கம் உண்டு. அதே சமயம் சங்குக்கு வாக்களித்த மக்களின் கூட்டுணர்வு வேறாக உள்ளது. மக்கள் மீண்டும் மீண்டும் கட்சிகளை ஒருங்கிணைத்து வாக்குகள் சிதறுவதைத் தடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அந்த எதிர்பார்ப்பை தொடர்ச்சியாக நிறைவேற்ற முடியாமைக்கு மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள் மன்னிப்புக் கேட்டார்கள்.

மக்களைச் சிதறடித்தது கட்சிகள்தான். அதற்கு மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியதும் கட்சிகள்தான். மக்களை ஆகக்குறைந்தபட்சம் ஒன்றுதிரட்டிய மக்கள்அமைப்பு அதைத்தொடர்ந்து எல்லாத் தேர்தல்களிலும் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கும் வாக்காளர்களின் கூட்டுணர்வை மதித்து பொறுப்பு கூறியது. அதைக் கட்சிகள் பின்பற்றுமா? சுயேச்சைகள் பின்பற்றுமா?

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக தமது மக்களுக்கு உண்மையைக் கூறாதவர்கள், பொய்யான வாக்குறுதிகளை வழங்கியவர்கள், தாங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியவர்கள் அனைவரும் தமிழ்மக்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும்.

பிரதான அரசியல்வாதிகளின் அணிகலன்களாக காணப்படும் இரண்டாம் மூன்றாம் நிலை அரசியல்வாதிகள் அநேகர் மீது ஊருக்குள் குற்றச்சாட்டுகள் உண்டு. பாலியல் குற்றச்சாட்டுகள், ரகசிய டீல்கள் போன்ற பல குற்றச்சாட்டுகள் உண்டு. தமது அணிகலன்களாக காணப்படும் இரண்டாம் மூன்றாம் நிலை முக்கியஸ்தர்கள் தொடர்பிலும் தமிழ் அரசியல்வாதிகள் மக்களுக்குப் பொறுப்பு கூறவேண்டும். "அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா" என்பது தமிழ்ப் படத்தில் வரும் கொமெடி வாக்கியமாக இருக்கலாம். ஆனால் தேசத்தை நிர்மாணிக்கும் அரசியலில் அது பகிடி அல்ல. பொறுப்புக்கூற வேண்டிய விடயம். தமிழ் அரசியல்வாதிகள் பொறுப்புக் கூறுவார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் தமிழறிஞர்:

## க. உமாமகேசுவரம்பிள்ளை

(05.05.1934 - 20.04.2024)


12

○ பா.துவாரகன்

**"மொழியினால் அமைந்த வீட்டிலேயே மனிதர்கள் வாழ்ந்து வருகிறார்கள்"**

*ரசல் ஸ்மித்*

## மொழியினால் அமைந்த வீடும் சொற்களால் கட்டிய மாலையும்



திருவாளர் மணி வேலுப்பிள்ளை, தாம் எழுதிய 'மொழியினால் அமைந்த வீடு' என்ற நூலிலே ரசல் ஸ்மித்தின் மேற்குறிப்பிட்ட வாசகத்தை மேற்கோள் காட்டுகிறார்.

இந்நூல் தமிழ்மொழியின் மரபை, சொற்களின் வலிமையை, மொழிபெயர்ப்பின் போது கவனிக்கவேண்டிய கருத்துகளின் சிதையாமையை வலியுறுத்துகின்றது. இந்நூலில் ஆங்கில நடையில் தமிழ், தமிழும் பெண்மைக்கு நெகிழும், ஆளுமை, மொழியின் முன் ஆணும் பெண்ணும் சமன், மொழியினால் அமைந்த வீடு, தமிழோசை, சோக்கிரட்டீஸ் ஒரு மீள் நோக்கு, மாயக்கோவஸ்கி, அலந்தே, டெங்சியாவோபிங் ஆகிய கட்டுரைகள் உள. வேலுப்பிள்ளை தனது கட்டுரைகளில் மொழியின் ஆளுமையை, அதன் பூரணமாந் தன்மையைக் கூறுவதுடன் நாம் எவ்வாறு தமிழ்மொழியை அதன் மரபை மறந்து ஆங்கில நடையிலும் செயற்கைத் தமிழ் நடையிலும் பயன்படுத்துகின்றோம் என்பதையும் பல்வேறு உதாரணங்களுடன் எடுத்துக் காட்டுகிறார்.

மணி வேலுப்பிள்ளை அவர்கள் காட்டும் ஓர் உதாரணம்:

பின்வரும் இரு தொடர்களும் இயல்பான தமிழ் நடையில் அமைந்தவை.

1. நீங்கள் விரும்பும் பாடல்
2. உங்களுக்கு விருப்பமான பாடல்

எங்களுக்கு ஆங்கிலம் அறிமுகமாகிறது: Your favourite song! எங்கள் உள்ளத்துள் அந்த ஆங்கில நடை குடிகொள்கிறது. இயல்பான தமிழ் நடை அதற்கு இரையாகிறது. ஆங்கில நடைக்குக் கட்டுண்ட செயற்கைத் தமிழ் பிறக்கிறது:

1. உங்கள் விருப்பப் பாடல் (செயற்கைத் தமிழ்)
2. உங்கள் அபிமான பாடல் (செயற்கைத் தமிழ்)

**மொழியினால் அமைந்த உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின் வீடு**

ஆசிரியர் உமாமகேசுவரன் அவர்கள் தமிழும் சம்ஸ்கிருதமும் ஆங்கிலமும் வல்ல மும்மொழிப் புலமையாளர். திருமதி சாவித்திரி உமாமகேசுவரன் அவர்கள் சம்ஸ்கிருதமும் ஆங்கிலமும் வல்லவர். இவர்கள் வீட்டிலே தமிழில் தான் உரையாடுவார்கள். உமாமகேசுவரனுக்கு எவராவது தொலைபேசி அழைப்பு எடுத்தால் முதலில் வணக்கம் என்று தான் சொல்லுவார். அவர் ஒரு போதும் 'ஹலோ' என்ற வார்த்தையை உச்சரித்ததே இல்லை.

**திருநிறை செல்வன்! திருநிறை செல்வி !**

திருமண அழைப்பிதழ்களில் மணமக்களை அடைமொழி இட்டு எழுதும் வழக்கம் உண்டு. மணமகனை திருநிறைச் செல்வன் என்றும் மணமகளை திருநிறைச் செல்வி என்றும் வல்லினம் மிக்க எழுதுவது தவறு என்று உமாமகேசுவரன் கூறித் தருகின்ற விளக்கம்:

நிறைச்செல்வன் என்றால் நிறை (பாரம்)கூடிய செல்வன் என்று பொருள் கொள்ளப்படும்; எப்போது திருநிறைச் செல்வன் ஆக இருந்தார் (நிறை கூடினார்) என்ற வினாவும் எழும். திருநிறை செல்வன், திருநிறைச் செல்வி என்று எழுதுவதே சரி என்றும் கூறுவார். திருநிறைச்செல்வன் என்று வாழ்த்தும் போது, எழுதும் போது திருநிறைந்த, திருநிறைகின்ற, திருநிறையும் செல்வன் என்று விரித்துப் பொருள் கொள்ளலாம்; இது முக்காலத்துக்கும் பொருந்தும்.

காலப் பொருத்தம் கருதி நாம் தவறாகப் பாடும் திருப்புகழ் வரி ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நம் அனைவருக்கும் தெரிந்த "ஏறுமயி லேறிவிழை யாடுமுக மொன்றே" என்ற திருப்புகழில் வரும் மூன்றாவது அடி "கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகமொன்றே". இதை நம்மில் பலர் "கூறுமடி யார்கள் வினைதீர்த்த முகமொன்றே என்று தவறாகப் பாடுவோம். வினைதீர்த்த என்பது இறந்த காலம். முருகனது அருள் எதிர் காலத்தில் எமது வினைகளைத் தீர்க்காதா? என்ற ஐயம் உண்டாகும். எனவே அடியார்கள் வினை தீர்க்குமுக(தீர்க்கும் முகம்) மொன்றே என்று வருவதே சரி என்று ஆசிரியப் பெருந்தகை கூறுவார்.

திருமண அழைப்பிதழ்களில் காணப்படும் இன்னோர் தவறு, "இருவருக்கும் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர் நிச்சயித்திருப்பதால்..." என்று ஒரு தொடர் வரும். இவ்வாக்கியத்தை "இருவருக்கும் திருமணம் செய்யப் பெரியோர் நிச்சயத்திருப்பதால்..." என்றே எழுதவேண்டும்; திரு மாங்கல்யம் மணப்பெண்ணுக்கே அணிவிப்பது. இருவருக்கும் அல்ல என்று உமாமகேசுவரன் தெளிவுபடுத்துவார்.

**உமாமகேசுவரன் பெற்ற பாராட்டுகள்!**

இலக்கிய கலாநிதிப் பட்டமும் பண்டிதமணிப் பட்டமும் பெற்ற இருவர் இருந்தனர். ஒருவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, மற்றவர் இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா.

பண்டிதர் க. நாகலிங்கம் அவர்களிடம் 2008 - 2009 காலப் பகுதியில் தமிழ் படிக்கச் சென்றேன். எனது ஐயங்களை வினாவாக எழுதிக் கொடுத்தால் அடுத்த தடவை செல்லும்போது விடை எழுதி வைத்திருப்பார். ஒரு நேர்காணலுக்கு ஏற்றவகையில் வினாக்களை அமைத்தேன். ஏறத்தாழ 100 வினாக்கள். அனைத்துக்கும் விடை எழுதித் தந்தார். நேர்காணலை நூலாக்கினேன். (எனது நூலில் அறியாமையால், கவனக்குறைவால் தவறுகள் பல இடம்பெற்று விட்டன. பின்னர் ஆசிரியர் உமாமகேசுவரம் பிள்ளை அவர்களிடம் காண்பித்தபோது திருத்தம் செய்து தந்தார். திருத்திய பதிப்பாக மீள வெளியிட வேண்டும்)

இந் நேர்காணலிலே இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்களை, பண்டிதர் நாகலிங்கம் அவர்கள் பின்வருமாறு மதிப்பிடுகிறார்:

> "பண்டிதர் மு. கந்தையா அறிஞர் இல்லை; பேரறிஞர். தமிழ்மொழியில் செய்யுள், உரைநடை, இலக்கண அறிவு, ஆராய்வு எல்லாவற்றிலும் கந்தையாவுக்கு இணையானவர் இல்லையெனலாம். மற்றையோரையும் புலமையாளராக்கப் பாடுபட்டவர். கலாநிதி கந்தையா சம்ஸ்கிருத சிறப்புப்பட்டதாரி; ஆங்கிலமும் நன்கு கற்றவர். சமயத்தில் அவருக்கு இணையாக எவரையுஞ் சொல்லமுடியாது; திருக்கேதீச்சர மான்மியத்தைக் காவியமாகச் செய்த பேரறிஞர். ஒழுக்கம், பண்பு என்பவற்றால் மேம்பட்டவர்."

பண்டிதர் மு. கந்தையா அவர்களது 'திருக்கேதீச்சர மான்மியம்' நூல் வெளியீட்டு விழாவிலே விமரிசன உரை ஆற்றியவர் பண்டிதர் உமாமகேசுவரன். வெளியீட்டு விழா நடைபெற்று அடுத்த நாள் காலை 6.00 மணிக்கு உமாவின் வீட்டு வாசலிலே பண்டிதர் கந்தையா அவர்கள் நிற்கிறார்; கையிலே ஒரு கடதாசியும் புத்தகமும்; தான் எழுதி வந்த பாடலை உமாவுக்கு வாசித்துக் காண்பித்துவிட்டு புறப்படுகிறார்.

**வாழ்த்துரை 1 :**

தேன்மயப் பொந்தென நாவலர் செப்புகே தீச்சரத்து
மான்மியத்துக்கொரு மான்மியம் வாய்த்திட்ட வாஅறிஞர்
நூனயத் தூர்நுழை நுண்மாண் நுழைபுல மேதைஉமா
தானயந் தாற்றிய நூல்வெளி யீட்டுரை தன்பரிசே

மு. கந்தையா

**வாழ்த்துரை 2 :**

பண்டித பரம்பரை சார்ந்த
திரு. க. உமாமகேஸ்வரம்பிள்ளை
அவர்களின்
செந்தமிழிலக்கண இலக்கிய
இரசனையை
நயந்து அளிக்கப்படும் எமது
அன்பளிப்பு

மு. கந்தையா - 1986 தை

கந்தபுராண தக்ஷகாண்டத்துக்கு எழுந்த உரைகளில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் உரையையே மெத்த விசேடமானது என்பார்கள். இலங்கைப் பல்கலைக்கழகமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் பண்டிதமணிக்கு கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தன.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து எழுதிய, 'முறையாகத் தமிழ் பயின்ற வித்தகர்' என்ற கட்டுரை 1982.07.29 அன்று ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமானது. பண்டிதமணி கட்டுரையைப் பின் வருமாறு நிறைவு செய்கிறார்:

பண்டிதர் திரு. கதிரிப்பிள்ளையின் புதல்வர் திரு. உமாமகேசுவரன். அவருடன் எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. அவரைக் காணும்போது, இரண்டு திருக்குறள் நினைவுக்கு வருவதுண்டு. ஒன்று,

**தந்தை மகற்காற்றும் நன்றி யவைத்து**
**முந்தி யிருப்பச் செயல்**

மற்றையது,

**மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை**
**என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்**

**உமாமகேசுவரன் எழுதிய ஒரு வாழ்த்துரை:**

### தொண்டுக்குப் பவளவிழா

இது துர்க்காதுரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது பவளவிழா மலருக்கு உமாமகேசுவரன் அவர்கள் எழுதிய வாழ்த்துரை; மொழியினால் அமைந்த வீட்டிலிருந்து உமாமகேசுவரன் சொற்களால் கட்டிய மாலை:

தீபம் நா.பார்த்தசாரதி (மணிவண்ணன்) எழுதிய குறிஞ்சிமலர் என்ற தொடர்கதை கல்கி இதழில் வெளிவந்த காலமது.

"குறிஞ்சிமலர் படிப்பதுண்டா?"

அப்போது ஆசிரியையாக விளங்கிய பண்டிதை, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வினாவினார்கள்.

'ஆம்' என்றதும் 'பூரணி அருமையான பாத்திரம்' என்று சிலாகித்தார்கள்; 'திலகவதியார் போன்ற பாத்திரமது' என்ற சிலிர்ப்பும் எய்தினார்கள்.

சொற்பொழிவாற்றுவதில் ஆற்றல் மிகப்படைத்த பூரணி, இறை உணர்வோடு சமூகசேவை புரிவதிலும் சிறந்தோங்குபவளாகச் சித்திரிக்கப்பட்டிருந்தாள். எனவே, தம் மனங்கவர்ந்த பூரணி என்ற கதாபாத்திரத்திலே பண்டிதையவர்கள் தம்மையே கண்டார்கள் என்று நாங்கள் அப்போது எண்ணினோம். அது உண்மை தான் என்பதை காலம் நிரூபித்துவிட்டது. சிறந்த சொற்பொழிவாளராக மிளிர்ந்தவர் கால கதியிலே சிறந்த ஆலய அறங்காவலராகவும் சமூகசேவையாளராகவும் பரிணமித்துவிட்டார்கள்.

துர்க்காதேவி தேவஸ்தானம் அறந்தழுவிய விழுதுகள் (ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கு, உணவு, உடை, உயர்கல்வி வழங்கி உறைவிடமாயும் மிளிரும் மகளிர் இல்லம், சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம் முதலானவை) பல பரப்பி மக்களுக்கு ஆன்ம சாந்தியெனும் நிழல்தரும் விருக்ஷம் என நிமிர்ந்து நிற்கின்றதென்றால், இதனை இதனாள் இவள் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவள் வசம்விட்ட ஆண்டவன் ஒருவனுக்குத் தான் நாமனைவரும் நன்றி சொல்ல வேண்டும்.

"முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ?"

தம்முடைய வாழ்வைத் தெய்விக நெறி தழுவிய மக்கள் தொண்டுக்கென அர்ப்பணித்துவிட்ட துர்க்காதுரந்தரி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு எடுக்கும் பவளவிழா, தொண்டு என்ற பண்புக்கே எடுக்கும் பவளவிழா.

வையகம் பயனுற வாழ்கின்ற அம்மையார் அவர்களை,
வாழ்கசெந் தமிழ்த ழைக்க வாழ்கமெய்ச் சைவ மோங்க
வாழ்கநல் லொழுக்க மோங்க வாழ்கதொண் டென்று மோங்க
வாழ்கவிவ் வுலகி லெங்குந் துர்க்கையின் வழிபா டோங்க
வாழ்கபல் லாண்டெம் அன்னை தங்கம்மா அப்பாக் குட்டி

என வாழ்த்துவோம்.

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு

2000.01.07

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சஞ்சீவி
20 ஒக்ரோபர் 2024

# சிறுவர் கைவண்ணம்


**மாணவர்களே!**

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.


உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




**ஜெ.சுஜானி**
தரம் - 11
மாசேரி வரணி




**கோ.நேருகா**
தரம் - 7
மு/வள்ளிபுனம் மகா வித்தியாலயம்



**க. பருதி**
தரம் - 2
சிறீ சண்முகானந்தா வித்தியாலயம்




**அ.மயூரி**
தரம் - 9
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி




**சு.டர்வின்**
தரம் - 5
யா/உடுவில் மகளிர் கல்லூரி



**ஆர்.ஜெருஷா**
தரம் - 6
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.



**ஸ்.செல்வரதீசன்**
தரம் - 3B
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி



**அ.மயூரி**
தரம் - 9
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி




**எஸ்.பாரதிகா**
தரம் - 10F
யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி

விசும்பின் துளி வீழின் அல்லால்...

# கைச் சுகாதாரம்

கைகளில் காணப்படும் அழுக்குகள், கிருமிகள் மற்றும் பிற தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்களை நீக்கும் வகையில், கைகளைச் சுத்தம் செய்யும் நடைமுறை

## ஏன் அவசியம்?

ஒரு சமூகத்தில்

- வயிற்றோட்டம் போன்ற நோய்கள் 40% ஆல்
- சுவாச நோய்கள் 20% ஆல்
- சுகாதார சேவைத் தொற்றுகள் 50% ஆல்
- பாடசாலையில் மாணவர்களின் வரவின்மை 50% ஆல்

குறைவடையும்!

## இலங்கையில்...




உலகின் அதிகுறைந்த செலவுடைய சுகாதாரச் செயற்பாடு <1$/ நபர்

*மூலம்: உலக வங்கி, ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், உலக சுகாதார ஸ்தாபனம், சுகாதார அமைச்சு*

# புலமையாளர் பதில்

**கேள்வி: பசுமை சந்தைப்படுத்தல் (Green Marketing) பற்றி விளக்குவீர்களா? இதற்கும் பசுமைச் சலவைக்கும் (Green Wash) இடையிலான வேறுபாடு என்ன?**

*(சிவகாமி, சுன்னாகம்)*

**பதில்:** பசுமை சந்தைப்படுத்தல் அல்லது சூழல்நேயச் சந்தைப்படுத்தல் என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை அவற்றின் சுற்றுச்சூழல் நன்மைகளின் அடிப்படையில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதைக் குறிக்கிறது. இது சுற்றுச் சூழலுக்கு உகந்த பொருட்கள் மற்றும் சேவைகளை சந்தைப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துகிறது. பெரும்பாலும் நிலைபேறான தன்மை, சமூக, சுற்றுச்சூழல் நலன்கள் மற்றும் நியாயமான சந்தைப்படுத்தற் செயற்பாடுகளை முன்னிலைப்படுத்துகிறது.

உதாரணமாக சுத்திகரிக்கப்பட்ட கொள்கலனில் அடைக்கப்பட்ட தண்ணீரைச் சந்தைப்படுத்தும் வணிகம் ஒன்று, இலகுவில் உக்கக்கூடிய, சூழலுக்குத் தீங்கு ஏற்படுத்தாத கொள்கலன்களை அல்லது சூழல்நேயமுள்ள தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்களின் மூலம் தண்ணீரை சுத்திகரிப்பதை அறிமுகப்படுத்துவதைக் குறிக்கும். ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்ரிக் போத்தல்களின் தேவையைக் குறைத்து கழிவுகளைக் குறைக்கும் நீர் சுத்திகரிப்பு முறைகளையும் இவ்வணிகம் ஊக்குவிக்கலாம்.

மாறாக பசுமைச்சலவை என்பது ஒரு பொருள் அல்லது சேவையின் சுற்றுச்சூழல் நன்மைகள் குறித்து நுகர்வோரைத் தவறாக வழிநடத்தும் செயற்பாடாகும். தேவைப்படும் சுற்றுச்சூழல் சார்ந்த தேவைகளை நிறைவேற்றாமல் ஒரு வணிகத்தின் வியாபாரக் குறியை, அதன் பெயரை பிரபல்யப்படுத்துவதற்காக, ஒரு பொருளின் நிலைபேறான தன்மையைப் பற்றிய மிகைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் அல்லது ஆதாரமற்ற உறுதிப்பாடுகளை வணிகங்கள் குறிப்பிடுவதை இது குறிக்கும். உதாரணமாக சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை பிளாஸ்ரிக் கொள்கலனில் அடைத்து விற்பனை செய்யும் வணிகமானது, தமது கொள்கலன்கள் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றன என்பதை மிகவும் பிரபல்யப்படுத்தும் அதேவேளை மிகக் குறைவான மீள் சுழற்சி நடைபெறுகின்றது என்பதை குறிப்பிடத்தவறுவதுடன், நிலத்தடிநீரை சுத்திகரிப்பதற்கு உபயோகிக்கும் இரசாயனப்பொருள்களின் பாவனை தொடர்பான உண்மைநிலையை மறைப்பதாகும்.

பசுமைச் சந்தைப்படுத்தல் என்பது சூழல் நலனில் உண்மையாகவே அக்கறை கொண்டு செயற்படும் வணிகங்களின் நடவடிக்கையாகும். அதேவேளை பசுமைச்சலவை என்பது உண்மையில் தேவையான மாற்றங்களைப் புகுத்தி சமூக மற்றும் சூழல் நேயம் சார்ந்த அக்கறையில் செயற்படாமல், தம்மை சூழல் நேயம் சார் வணிகங்கள் என அடையாளப்படுத்தி மாயை ஒன்றை உருவாக்கி சூழல்நேய வாடிக்கையாளரை கவர்வதற்காக மேற்கொள்ளும் தந்திரோபாயமாகும்.

வெற்றிகரமான பசுமை சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள், நுகர்வோரிடையே நீண்டகால விசுவாசத்தையும் நம்பிக்கையையும் உருவாக்கும், மாறாக பசுமைச்சலவையானது தற்காலிகமான பொய்கூறல் வெளிப்படும் போது, நுகர்வோரின் நம்பிக்கையை முழுமையாகப் பாதித்து விடும், அதிலிருந்து வணிகங்கள் மீண்டு வரமுடியாது.

சூழல் நேய வணிகங்கள் சூழல் சார்ந்த நியமங்கள், நடைமுறைகளைப்பின்பற்றி உண்மையான நேர்மையான வணிக முயற்சிகளை நுகர்வோருக்கு வெளிப்படுத்தி சூழல் நேய உற்பத்திகளை சந்தைப்படுத்தி வெற்றி கொள்கின்றன. இது தொடர்ச்சியான நன்மைகளை உருவாக்கும், மாறாக பசுமைச் சலவையில் வெளிப்பார்வைக்கு மட்டும் மேம்படுத்தல்களை மேற்கொண்டு, உண்மைநிலை கண்டறியப்படும் போது, அதிக தண்டப்பணம் செலுத்தவேண்டி ஏற்படும்.

அதேவேளை, நுகர்வோர் இழப்பு, நற்பெயர் கெடுதல் போன்ற தீமைகளையும் அனுபவிக்க நேரிடும்.

நுகர்வோராக, பசுமைச் சலவையைக் கண்டறிய முயல்வதோடு மட்டும் நின்றுவிடாது அது தொடர்பில் நாம் ஏமாறாது அவதானமாக இருக்க வேண்டியதும் அவசியமாகும்.

**பேராசிரியர் சிவாணி சண்முகதாஸ்**
வணிக முகாமைத்துவ கற்கைகள் பீடம்
யாழ் பல்கலைக்கழகம்.




## கடந்த மாத அமர்வு: பரப்புரைகளின் வெற்றி

வடக்கின் இளம் நீர்வாண்மையாளர்கள் வட்டத்தின் கடந்தமாத அமர்வில் "விளைதிறன்மிகு தொடர்பாடல் பரப்புரைகள்" தொடர்பில் அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்துப் பல்கலைக்கழகத்தின் விவசாயத் துறை ஆய்வாளராகச் செயற்பட்டுவரும் செவரின்வன் பொமீல் அவர்கள் கருத்துரை வழங்கியிருந்தார்.

திட்டமிட்டு, ஒழுங்கமைக்கப்படும் பரப்புரைகளின் வெற்றிக்கு விளைதிறனான தொடர்பாடல் மிகவும் இன்றியமையாததாகும். இவற்றினைச் செயற்படுத்தும் போது எதிர்பார்க்கப்படும் இலக்குகளையும் அடைவுகளையும் பெறுவதற்கு தொடர்பாடல் படிமுறைகளை சரிவரக் கையாள்வது மிகவும் அவசியமாகும் என அவர் குறிப்பிட்டிருந்தார். கலந்துரையாடலில் பங்குபற்றியோரின் எண்ணங்களைக் குவிக்கும் வகையிலே, குறிப்பாக கடந்த மாதம் நல்லூர்த் திருவிழாவினை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட நிலத்தடிநீர் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடு மூலம் வெளிப்படுத்தப்பட்ட தொடர்பாடலின் எத்தகைய விடயங்கள் சரிவரப் பின்பற்றப்பட்டன? எவ்வாறான விளைதிறன்மிகு உத்திகள் மூலம் வருங்கால செயற்றிட்டங்களை மேம்படுத்தமுடியும் என்பது தொடர்பில் வடக்கின் இளம் நீர்வாண்மையாளர்களின் கருத்துகளை ஒருங்கிணைத்து இக்கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பரப்புரைகளைத் திட்டமிடுவது எப்படி என்பதையும் அவர் தெளிவுபடுத்தியிருந்தார். பரப்புரைகள் எவையாயினும் முறையாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்படாவிடில் அவை விழலுக்கு இறைத்த நீராகப் போய் விடும்.

### பரப்புரைகள்

- இலக்கை வரையறுத்தல்.
- இலக்குக் குழுவை விளங்கிக்கொள்ளல்.
- பிரதான செய்திகளை வடிவமைத்தல்
- பொருத்தமான தொடர்பாடல் ஊடகத்தைத் தெரிவுசெய்தல்
- ஈடுபடுத்தும் உள்ளடக்கத்தை வடிவமைத்தல்.
- பரப்புரையை மேற்கொள்ளல்
- முன்னேற்றத்தைக் கண்காணித்தலும் மதிப்பிடலும்
- உத்தியை மீள்வடிவமைத்தல்
- இலக்குக் குழுவைச் செவிமடுத்தல்
- முயற்சியைத் தொடரவும் நிலைபெறவும் செய்தல்

## அறைகூவல்!

**தலைப்பு: 'குடி நீர் வழங்கல் எனும் பார்வையில் வட மாகாணத்தின் நீர்ப்பாதுகாப்பு'**

**வழங்குபவர்:** எந்திரி. ம.எ.சுதர்சன்,
பிரதம பொறியியலாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை,
வருகைதரு விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்.

**திகதி : 24.10.2024**
**நேரம் : 7.30 pm**

**அடையாளம்: 988 210 5064**
**கடவுச்சொல்: Abc.1234**

எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி துளியின் 8 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடி வரும். வடமாகாணத்து நீர் வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி: **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna;** மின்னஞ்சல்: **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பூமி பேசுகிறேன்

பாலாஜினி



பூமி மிக அவசரமாக சூரியமண்டலத்தின் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தது. அதன் நாடித்துடிப்பு குறைந்து கொண்டே இருந்தது. மருத்துவமனை வாசலில் முண்டியடித்துக் கொண்டிருந்த பத்திரிகை ரிப்போட்டர்களின் சரமாரியான கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது திணறிக் கொண்டிருந்தார் மிஸ்டர் சூரியன்.

"நீங்கள் வெப்பத்தை அதிகரித்ததால் தான் பூமி பாதிப்படைந்திருக்கிறது என்று பூமிவாசிகள் கூறுகின்றார்களே இது உண்மையா?"

"உங்கள் வெப்ப அதிகரிப்பினால் தான் பூமியின் ரத்த நாளங்கள் வற்றிப் போனதா?"

"நீங்கள் கொலைகாரனா?"

'சே... இவர்கள் எத்தனை முட்டாள்தனமான கேள்விகளை எல்லாம் உருவாக்கி வைத்திருக்கின்றார்கள். என் படைப்புகளில் ஒன்றான பூமிக்கு நானே துரோகம் செய்வேன் என இவர்கள் எப்படி எண்ணுகின்றார்கள்?' பொங்கி வந்த அழுகையினை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார் சூரியன்.

பத்திரிகைக்காரர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறும் நிலையில் சூரியன் இல்லை. பூமியை எப்படியாவது காப்பாற்றி விட வேண்டும் என்ற உத்வேகமும் பரபரப்பும் மட்டுமே அவரிடமிருந்தது. அதற்காக அவர் எதனையும் நிகழ்த்தத் தயாராகவே இருந்தார். அந்த உத்வேகம் அதிகரிக்க அதிகரிக்க சூரியனின் உள்ளக வெப்பமும் உயர்ந்து கொண்டே இருந்தது.

கோடிக்கணக்கான ஏன் கணக்கிடவே முடியாத பிரசவங்களை எல்லாம் வழங்கியிருந்த பூமி, ஒக்சிசன் சிலிண்டர் பொருத்தப்பட்டு நினைவிழந்து, உருவிழந்து, சோர்ந்து போய் படுத்திருந்தது. அதன் வரண்ட கைகளில் உயிர்ப்பசையே இல்லை. சூரியமண்டலத்தின் அத்தனை மருத்துவர்களும் அதனைச் சூழ்ந்திருந்தார்கள். அவர்கள் தமது பாசையில் ஏதோ பேசிக் கொள்வதும் பின்னர் உதடுகளைக் கோணிக்கொள்வதுமாக இருப்பதில் இருந்து நிலைமை கைமீறிப் போய்விட்டது என்று மட்டும் புரிந்தது.

பூமியின் நெருங்கிய உறவினர்களான வெள்ளியும் செவ்வாயும், பூமி அனுமதிக்கப்பட்டிருந்த அவசர சிகிச்சைப் பிரிவு வாசலில் பயம் கலந்த வியர்த்த முகங்களுடன் பேசிக் கொண்டு நின்றிருந்தார்கள்.

"பூமிக்கு என்ன கஷ்ட காலமோ தெரியவில்லை. இந்த மனிதர்கள் செய்த வேலையை பார்த்தாயா செவ்வாய்? முழுதாக அவளை வறட்சிப்படுத்தியிருக்கிறார்களே?"

"வறட்சி மட்டுமா வியாழன் நீ கேள்விப்படவில்லையா? ஏதோ இராசயனங்களையும் விதைத்திருக்கிறார்களாமே?"

"ஆமாம், அதனை தான் செயற்கை என்று குறிப்பிடுகிறார்கள். இந்த மனிதர்கள், உன்னிடத்திலும் அடிக்கடி வந்து போவதாக சொன்னாயே சற்று கவனமாக இருந்து கொள்"

என்று செவ்வாய்க்கு அறிவுரை கூறிக் கொண்டிருந்தது வியாழன்.

இதற்கிடையில் "நள்ளிரவு 12 மணியளவில் மிக முக்கியமானதும் இறுதியானதுமான நிருபர்கள் சந்திப்பொன்று நடைபெறும் .அதில் சூரியமண்டலத்தின் அனைத்து அங்கத்தவர்களும் கட்டாயமாக கலந்து கொள்ள வேண்டும்" எனவும் அறிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, பூமிவாசிகளின் நிலையோ மிகமோசமானதாக இருந்தது. மனிதர்கள் பிசாசுகளாக மாறி ஒருவரை ஒருவர் பிடித்து தின்றுகொண்டிருந்தார்கள். அவர்களின் முகங்கள் கோரமாகியிருந்தன. பறவைகளையோ, விலங்குகளையோ காண முடியவில்லை. அருவிகள் ஆறுகளெங்கும் வற்றி வரண்டு பாளம் பாளமாக வெடித்து இரசாயன நஞ்சாக்கிகள் புகைந்து கொண்டிருந்தன. பூக்களையே காண முடியாது பூகம்பம் நிகழ்ந்து கொண்டிருந்தது. எஞ்சியிருக்கும் சொற்ப மனிதர்களும் இன்றோ நாளையோ அழிந்துவிடத் தான் போகின்றார்கள். மனிதர்கள் மிக மோசமான வர்ணிக்கவே முடியாத பாதகர்கள்.

சூரியமண்டலத்தின் நிருபர்கள் சந்திப்பறையில் மிஸ்டர் சூரியன், பூமி தவிர்ந்த அவரது மற்றைய ஏழு படைப்புகளும், அந்த படைப்புகளின் உதவியாளர்களும், (உப கோள்கள், துணைக்கோள்கள்), சூரியமண்டலத்தின் மருத்துவர் குழாமும் என ஏராளமானோர் வெளிறிப்போன முகங்களுடன் குழுமியிருந்தனர். சந்திரன் (பூமியின் துணைக்கோள்) மௌனமாக அழுதுகொண்டிருந்தார்.

பூமியின் நிலை தொடர்பாக அவசரமாக விவாதிக்கப்பட்டது.

"பூமியின் இரத்த நாளங்கள் முற்றிலுமாக வற்றி விட்டதனால் அதை உயிர்ப்பிப்பது எங்களால் முடியாத ஒரு காரியமாக இருக்கின்றது. நாங்கள் முடியுமான வரைக்கும் முயற்சி செய்து விட்டோம்"

இது தலைமை மருத்துவரின் கருத்து.

"ஆம் உங்கள் பூமியின் இதயம் செயற்பட மறுத்துக் கொண்டிருக்கின்றது. கையாலாகாத நிலையில் தற்போது நாங்கள் இருக்கின்றோம். தயவு செய்து எங்களை மன்னித்து விடுங்கள் சூரியனே இது இயற்கையின் விதி போலும்"

தலைகுனிந்தபடியே கவலையுடன் இந்த வார்த்தைகளை கூறினார் உதவி மருத்துவர்.

"பூமிக்கு இந்நிலை ஏன் வந்தது? இத்தனை காலமும் நீங்கள் இது பற்றிச் சிந்திக்கவில்லையா மிஸ்டர் சூரியன்?"

இது பத்திரிகையாளர் ஒருவரிடமிருந்து கேட்கப்பட்ட கேள்வி.

"எனது மண்டலத்தில் உள்ள அத்தனை படைப்புகளுமே எனக்கு முக்கியமானவை தான். ஆனால் உயிர்கள் பரந்து வாழக் கூடிய பூமி சுகவீனமுற்றிருப்பது இன்றைக்கல்லவே. அது கொஞ்சம் கொஞ்சமாக மனிதர்களால் சுகவீனமுற செய்யப்பட்டு வந்திருக்கின்றது. என்னால் செய்ய முடிந்தது ஒன்று தான். அவர்களை கட்டுப்படுத்துவதற்காக அனர்த்தங்களை ஏற்படுத்துவது தான். வெயில், மழை, புயல், வறட்சி, நிலநடுக்கம் ஆகிய அனர்த்தங்களினை அதிகரித்து வழங்குவது தான். அதன் மூலமாக அவர்களுக்குப் புரிய வைக்க எவ்வளவோ முயற்சி செய்தேன். பூமியை மாற்ற எண்ணினால் ஏற்படும் ஆபத்துகளை அறிவிக்க பாடுபட்டேன். ஆனால் அது நடக்கவேயில்லை. இயற்கை அனர்த்தங்களினை கட்டுப்படுத்துவதற்காக அவர்கள் செய்த முயற்சிகளும், செயற்கை வாழ்க்கையும் தான் எனது பூமியின் இந்நிலைக்கு காரணம்" சொல்லிவிட்டு தேம்பி அழுதார் சூரியன்.

"எத்தனை நாட்கள் தான் இதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் சூரியனே. இவ்வாறு தான் நீங்கள் ஒரு ...டோவையும் இழக்கவேண்டி வந்தது மறந்துவிடாதீர்கள்."

இடையிட்டு ஓங்கி ஒலித்தது சந்திரனின் குரல். "ஆமாம், மனிதர்களை கட்டுப்படுத்துவதற்காக வெப்பத்தையும் மழையையும் அதிகரித்தேன் என பொய்ச் சாட்டு கூறுகின்றீர்கள் தலைவர் சூரியனே? பாவம் எத்தனை கோடி உயிர்கள் வசித்தன பூமியில் என்று தெரியாதா தங்களுக்கு? நாளை நமக்கும் இந்நிலை தானோ?"

கோபத்தில் கத்தியது செவ்வாய்.

"தயவு செய்து உங்கள் வாக்குவாதங்களை விட்டு விட்டு உடனடியாக செய்ய வேண்டியவற்றை சிந்தியுங்கள்." மேசையில் கையினை ஓங்கித் தட்டி நிலைமையை விளக்க முயன்றார் தலைமை மருத்துவர்.

இறுதி அவசர சந்திப்பும் தோல்வியில் முடிந்தது. மறுநாளும் விடிந்தது.

சூரியமண்டலத்தில் ஏதோ ஒரு பிரகண்டம் நிகழப்போகின்றது என்று மட்டும் சூரியனுக்கு தெளிவாகப் புரிந்தது. அதன் யோசனை அதிகமாக அதிகமாக வெப்பநிலையும் உயர்ந்து கொண்டே வந்தது. பூமியின் நேரம் நள்ளிரவு 12 மணியடித்தும் கூட வெப்பம் 99 பாகை செல்சியஸ் அளவில் உயர்ந்திருந்தது.

பூமி அனுமதிக்கப்பட்டிருந்த அவசரசிகிச்சைப் பிரிவில் இருந்து மெலிதான ஒரு ஈனக்குரல் மெல்ல மெல்ல அனுங்கியபடி ஒலித்தது. பூமிதான் வேதனை தாள முடியாது அரற்றிக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் இருந்து இரத்தத் துளிகள் வடிந்து கொண்டேயிருந்தன.

அருகில் சூரியனும், சந்திரனும் அழுது அழுது வீங்கிய முகங்களுடன் அமர்ந்திருந்தார்கள். சூரியனின் கைகள் பூமியின் கரங்களை இறுகப்பற்றியிருந்தன. பூமி பேசத் தொடங்கியிருந்தாள். " இந்த மனிதர்கள் மோசமானவர்கள். அவர்கள் அன்றைய மனிதர்களை போன்றவர்களல்லர். அன்றைய மனிதர்கள் என்னை ஆராதித்தார்கள். என்னை மாற்ற நினைக்கவில்லை. நானும் அவர்களுக்காக வாரி வழங்கினேன்." பூமியின் குரலில் தடங்கல் ஏற்பட்டது. அவள் சில நிமிடங்கள் தொடர்ச்சியாக இருமிவிட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மீண்டும் தொடர்ந்து கூறினாள்.

"இன்றைய மனிதர்கள் என்னை இரசாயனங்களால் மெழுகி இயந்திரங்களால் உழுது என்னை சீரழித்து பலவந்தப்படுத்தி விட்டார்கள். அப்படி இருந்தும் நான் வாரி வழங்கவே செய்தேன். மரஞ்செடிகளை பிடுங்கி எறிந்து, ஆறுகள் மற்றும் அருவிகளை வறிதாக்கி விட்டு, என்னை நம்பி வாழ்ந்த எத்தனையோ உயிரிகளை எல்லாம் கொன்றுவிட்டு தாம் மட்டும் வாழ நினைத்துக் கொண்டார்கள். எந்தன் கன்னித்தன்மையை சீரழித்த பின்னும் அவர்களை மன்னித்தேன். ஆனால் அவர்கள் என்னை புரிந்துகொள்ளவில்லை. அவர்களுக்காக போராடிய நான் இறுதியில் இறக்கப் போகிறேன். இந்த உலகத்தின் அத்தனை கெட்ட வார்த்தைகளுக்கு சொந்தக்காரர்கள் மனிதர்களே." குலுங்கி அழுதாள் பூமிப் பெண். அவள் உடலும் அதிர்ந்து குலுங்கியது.

"நான் தான் தவறு செய்து விட்டேன் போலும் என்னை மன்னித்துவிடுவாயா பூமி?" அழுதுகொண்டே அரற்றிக் கொண்டார் சூரியன். பூமியை யாராவது காப்பாற்ற மாட்டார்களா? சூரியமண்ட லத்தின் அத்தனை படைப்புகளும் ஏங்கின.

சூரியனின் கண் முன்னே பூமியின் இதயம் வெடித்துச் சிதறியது. ஓ... என்ற அலறலுடன் சூரியமண்டலமும் ஒரு முறை அதிர்ந்து அடங்கியது. பூமியின் ஏதோ ஒரு ஓரத்தில் இன்னமும் பூமியையே நம்பி சுவாசித்துக் கொண்டிருந்த ஒரு பறவையின் இறுதி நம்பிக்கையும் அதனுடன் வெடித்துச் சிதறியது.

"பூமி அனைத்து உயிர்களுக்குமானது"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காவு வாங்கக்...

அதற்குரிய இயந்திரம் இங்கு ஒப்பந்த வேலைகளில் ஈடுபடும் தென்னிலங்கை நிறுவனங்களிடம் உண்டு.
இவை எல்லாம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பணியாற்றும் பொறியியலாளர்களுக்கும் தெரியாதவையல்ல.
சங்குப்பிட்டிப் பாலத்தில் கறள் இவ்வளவு தூரம் இருப்பதற்குக் காரணம், அதனை ஒழுங்காகப் பராமரிக்கவில்லை என்பதுதான். கொங்கிறீட்டில் அமைந்த பாலம் என்றால் பராமரிப்பு வேலை இலகுவானது. ஆனால் எஃகுவினாலான பாலங்களைப் பராமரிப்பது கடினம். அந்தப் பாலங்களில் எப்போதும் கறள் வராது பார்த்துக் கொள்ளவேண்டும்.
கறள் வந்த பின்னர் செய்யப்படும் பரிகாரங்கள் எல்லாமே முழுமையான தீர்வைத் தருவன அல்ல.
பாலத்தின் இரு மருங்கிலும் எஃகுவினாலான கைப்பிடிச் சட்டங்கள் பாவனையாளர்களின் பாதுகாப்புக் கருதி அமைக்கப்பட்டுள்ளது.
இவற்றையும் கறள் விட்டுவைக்கவில்லை. மக்களின் நன்மை கருதி. இரவில் அவை தெரியக் கூடியவாறு சிவப்புத் துணி கட்டி அடையாளப்படுத்தும் செயற்பாடும் செய்யப்படவில்லை.
இவ்வாறு செய்யாமை காரணமாக செம்மணியில் இரண்டு உயிர்கள் அநியாயமாக இழக்கப்பட்டன என்பதை அதிகாரிகள் மறக்கக் கூடாது.
பாலம் தொடர்பில் பல்வேறு ஆபத்துகள் இருக்கும் நிலையில், அவற்றை உதாசீனம் செய்வது போல பூசி மெழுகுவதற்கு அதிகாரிகள் ஏன் முற்படுகின்றார்கள்?
மக்கள் பிரதிநிதிகளும், மாவட்டச் செயலரும் இந்தப் பாலம் தொடர்பில் கரிசனை எடுக்கவேண்டும். ஏதாவது ஒரு பேரனர்த்தம் இடம்பெற்றபின்னர் கூச்சலிட்டுவிசாரணைக்குழு அமைப்பதில் பயனில்லை. வரும் முன் காப்பதே உசிதம்.


# மின்சாரத்துண்டிப்பை சீர்செய்து தரவேண்டும்



யாழ்ப்பாணம், அளவெட்டி வடக்கு ஜே/215 பிரிவுக்குட்பட்ட தம்பயப்புலம் பகுதிக்குள் அடங்கும் ஞான வைரவர் சன சமூக நிலையமானது 2018 காலப்பகுதிக்கு முன் மக்கள் நடமாட்டத்துடன் மின்சார வசதியுடனும் அந்நிர்வாகம் சீராக இயங்கியது.

2018 காலப்பகுதிக்கு பின்னர் கொரோனா தொற்றின் காரணமாக நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாமையினால் குறித்த நிலையமானது எவராலும் பராமரிப்பின்றி முற்றிலும் கைவிடப்பட்டதுடன் மின்சார சபையினால் மின் துண்டிப்பும் செய்யப்பட்டது.

இதன் காரணமாக முற்றாக கைவிடப்பட்டு பாழாகி இருந்த சனசமூக நிலையத்தினை எமது ஊடகக் கற்கைகள் துறையின் செயற்றிட்டத்துக்காக எனது முயற்சியில் இந்தச்சன சமூகநிலையத்தினை சுத்தப்படுத்தி ஓரளவுக்கு இயங்கும் நிலையினை ஏற்படுத்திக் கொடுத்திருந்தேன். இருப்பினும் மின்சார வசதி இன்மையால் இந்தச் சனசமூக நிலையம் முழுமையாக இயங்குவதில் இடர்பாடு ஏற்பட்டுள்ளது. மின்சார இணைப்பை மேற்கொள்ளுமாறு பலமுறை மின்சாரசபையிடம் கோரிக்கை விடுத்தபோதும் அவர்கள் அதுகுறித்து எவ்வித அக்கறையும் காட்டவில்லை.
மின்சார இணைப்பை மீண்டும் ஏற்படுத்தி தருவதன் வாயிலாக சனசமூக நிலையத்தில் மாலை மற்றும் இரவு நேர வகுப்புகளும் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்க முடியும்.



எனவே மாணவர்களினதும் மக்களினதும் நலனைக் கருத்திற்கொண்டு குறித்த சனசமூக நிலையத்துக்கு மீளவும் மின்னிணைப்பு வழங்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றேன்.

ஜனனி திருச்செல்வம்
ஊடகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

# ஊர்ப்புதினம்

இராகவன்

பாகம் 3

எங்கட மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில பிரார்த்தனை மண்டபம் வகுப்புகளுக்கு முன்வளமா உள்ளுக்குள்ளையே இருந்தது. உயரமானமேடை. அதோடயிருக்கிற சுவரில யன்னல் மாதிரிக் கட்டியிருக்கும். அதைத்திறந்தால் அதுக்குள்ள தான் சுவாமிப்படங்களிருக்கும். நவராத்திரி காலங்களில அதுக்குள்ளதான் கும்பம் வைச்சுக் கீழை மண் போட்டு நவதானியம் விதைப்பினம். கடைசிநாள் கும்பத்தைத் தூக்கிக் கொண்டுபோய் தச்சந்தோப்புப் பிள்ளையார் கோவிலின்ர மேற்குமூலையிலயிருக்கிற வைரவர் கோவிலுக்கு முன்னாலயிருக்கிற கேணியில போடுவம். ஒராள் கும்பத்தைக் கையில் ஏந்திக்கொண்டு போக அவரோட சேர்ந்து ஐயா மணியடிச்சுக்கொண்டு நடப்பார். அதுக்குப் பிறகால நாங்கள் போவம் அந்த நிகழ்வு எங்களுக்கு ஒரே முசுப்பாத்தியாயிருக்கும். அப்ப பள்ளிக்கூடத்தில நடக்கிற ஒரேயொரு விசேடமெண்டால் அது நவராத்திரி தான்.

நான் மாணிக்கவாசகர் வித்தியாலயத்திலயிருந்து விக்கினேஸ்வராக் கல்லூரிக்குப் போனாப் போல நடந்த முதல்நவராத்திரியும் மறக்கமுடியாத ஒண்டாப்போச்சு,. 1990 கோட்டையைச் சுத்திவளைச்சு இயக்கம் அடிச்சுக் கொண்டிருந்ததால அந்தமூட்டம் பள்ளிக்கூடங்களெல்லாம் ஒரு ஆறுமாதம் மூடியிருந்தது. அதால 1990 பள்ளிக்கூடத்தில நவராத்திரி நடக்கேல்ல.

பிறகு எல்லாம் முடிஞ்சு சுமுகமாய் வந்தாப்போலைதான் நவம்பர்க் கடைசியில பள்ளிக்கூடந் தொடங்கிச்சுது, அதால 1991 தான் பள்ளிக்கூடத்தில நவராத்திரி நடந்தது.

02

நவராத்திரிக் கடைசிநாள் பள்ளிக்கூடத்தில வாணிவிழா எண்டு கொண்டாடுவினம். அதிலை நாடகம், நடனம், பாட்டு, பட்டிமன்றம் எண்டு பலநிகழ்ச்சியள் களைகட்டும். ஒவ்வொரு வகுப்பிலயிருந்தும் கட்டாயம் ஒராள் பங்குபற்றவேணும், என்னைக் கவிதை வாசிக்கிறதுக்குப் போட்டுட்டாங்கள். அப்ப எங்களுக்கு துன்னாலைச் சங்கரப்பிள்ளை மாஸ்ரர்தான் வகுப்பாசிரியராஇருந்தவர். அவருக்கு எல்லாரும் பீச்சற்பயம். எப்பவும் கையில ஒரு நீளப்பிரம்போடதான் திரிவார். பிரம்படிக்கு அவர்தான் பேமஸ். எனக்குக் கவிதை வாசிக்க மனமில்லை. அதோடமேடையில ஏறினாத் தொடைநடுங்கும்.

என்னைக் கவிதை வாசிக்க இந்துமாமன்றத் தலைவர் இருந்த சீலண்ணாதான் போட்டவர். இந்துமாமன்றப் பொறுப்பாசிரியராயிருந்தவரும் சங்கரப்பிள்ளை மாஸ்ரர்தான். பிறகு என்னெண்டு கவிதை வாசிக்க மாட்டன் எண்டுசொல்லுறது? மாட்டன் எண்டால் உடனை சீலண்ணா சங்கரப்பிள்ளை மாஸ்ரரிட்டத்தான் சொல்லுவர். பிறகு என்ன நடக்குமெண்டு தெரியுந்தானே? 'இந்த வாணிவிழாவுக்கு முதல் நாளிரவு பலாலி ஆமிக்காம்பிலையிருந்து செல்லடிக்கப் போறாங்களாம். வடமராட்சியில யிருக்கிறாக்களை உடனடியா எழும்பிப் பாதுகாப்பான இடங்களுக்குப் போகட்டாம் ' எண்டொரு செய்திபரவிச்சுது. அந்தமூட்டம் அம்மா இளையண்ணாவை வெளிநாட்டுக்கு அனுப்பவெண்டு அம்மம்மாவை என்னோட விட்டுட்டுக் கொழும்புக்குப் போகிட்டா . நானும் அம்மம்மாவும் தான் வீட்டில. இரவில இரண்டு பேரும் போய் நவண்ணா வீட்டில படுப்பம். அண்டிரவு நான் ஊர்ப்புதினம் இரண்டாம் பாகத்தில குறிப்பிட்ட இந்து மதியக்காவின் தாத்தா வெளியால நவண்ணாவின்ர அத்தானைக் கூப்பிட்டு இந்தச் செய்தியைச் சொன்னார். அப்ப முன்னிரவு பத்துமணியிருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொல்கொண்டா லேசர் ஷோ

# அயல் தேசத்தில் சில நாள்கள்... 7

டிலீப் அமுதன்

கொல்கொண்டா கோட்டையின் வரலாற்றைச் சொல்லும் 30 நிமிட குறும்படம். கோட்டையின் சுவர்கள்தான் திரை. அந்த நீளமான சுவர் திரையில் திறந்தவெளியில், கொல்கொண்டா கோட்டையின் வரலாற்றையும் பின்னணிக் குரல் மற்றும் இசையுடன் கேட்கும்போது ஒரு தனி உலகத்துக்குள் நாங்கள் பிரவேசித்தோம். அந்தக் கணீர் குரல், மன்னர் காலத்து வரலாற்றுக்கென்றே உள்ளதைப்போன்று இருந்தது. இரவு நேரத்தில், கோட்டைச் சுவர்களில் ஒளிரும் இந்தத் திரையிடல் பல கோடி அற்புதம்தான். இந்தத் திரையிடலுக்கு முன்னால் '3டி' என்ன நவீன தொழில்நுட்பங்கள் அனைத்தும் தோற்றுவிடும். இந்த லேசர் ஷோவைப் பார்ப்பதற்கு மாத்திரம் பல ஆயிரக்கணக்கானோர் படையெடுக்கின்றனர். இதை தெலுங்கானா அரசுதான் முன்னெடுக்கின்றது.

அதைப்பார்த்தபோது எங்கள் யாழ்ப்பாணத்துக்கு கோட்டைச் சுவரிலும் இப்படியொரு லேசர் ஷோவைச் செய்தால் எப்படியிருக்கும் என்ற எண்ணம்தான் என் மனதில் ஓடியது. வடக்கு மாகாணத்தை சுற்றுலாத்துறையில் மேம்படுத்துவதற்காக வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் இருக்கின்றது. அவர்கள் இதைக் கவனத்தில் எடுத்து ஆகக்குறைந்தது வாரத்தில் ஒரு நாள், இப்படியான லேசர் ஷோவை யாழ்ப்பாணக் கோட்டையின் சுவரில் முன்னெடுத்தால் சுற்றுலாவிகளை இன்னமும் அதிகமாக ஈர்க்கமுடியும். கொல்கொண்டா கோட்டையின் லேசர் ஷோவையும் முடித்துக்கொண்டு அங்கிருந்து இரவு 7.50 மணியளவில் எங்கள் இருப்பிடம் நோக்கிப் பேருந்தில் புறப்பட்டோம்.

## ஐந்தாம் நாள்

எமது ஐந்தாம் நாள் பயணம் ஹைதராபாத்தைவிட்டு வெளியில் 120 கிலோ மீற்றர் தூரம் செல்லவேண்டியிருந்தது. அதனால் காலையில் நேரத்துடன் புறப்படவேண்டியிருந்ததால் யோகா வகுப்பு நிறுத்தப்பட்டிருந்தது. காலை உணவும் நேரத்துடன் காலை 6.30 மணிக்கே தயாராகியிருந்தது. அத்துடன் அன்றைய தினம் நாம் உள்ளூர் 'சிம்'களை கொள்வனவு செய்வதற்கு ஏற்ற வகையில் ' சிம் 'விற்பனை செய்யும் நபர் ஒருவர் கோதாவரி விடுதிக்கு வந்திருந்தார். யாழ்ப்பாணத்தில் தெருவுக்கு தெரு சிம்களை விற்கின்றனர். அவர்களிடம் சிம்மை வாங்குவதற்கு 5 நிமிடம்போதும். ஆனால் அவரிடம் சிம் வாங்க சுமார் 30 நிமிடம் தேவைப்பட்டது. எங்களின் கடவுச்சீட்டை கொடுத்து, அதில் விசா அனுமதிக்கப்பட்ட காலத்துக்கு மாத்திரமே சிம் செல்லுபடியாகும் வகையில் தருகின்றனர். 450 இந்திய ரூபாவுக்கு சிம்மை வாங்கினேன். நாள் ஒன்றுக்கு 1.5 ஜிபி டேட்டா இலவசம். எந்தவொரு அழைப்பும் இலவசம். இதேபோன்றதொரு வசதியுடன் ராஜீவ்காந்தி சர்வதேச விமானநிலையத்திலும் சிம் விற்கின்றனர். ஆனால் அங்கு 750 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றனர். குறுகிய நேரத்துக்குள் ஒரு சிலரே சிம்மை கொள்வனவு செய்ய முடிந்தது.

அதைவிட அன்றைய தினம் காலையில் எங்களின் பயணத் திட்டமும் மாற்றப்பட்டிருந்தது. எமது நிறுவனத்தின் எல்லையிலிருந்து 50 மீற்றர் தூரத்திலுள்ள தெலுங்கானா அரசின் குருக்குள் பெண்கள் பாடசாலைக்குச் செல்லத் திட்டமிடப்பட்டிருந்தது. எம்.சி.ஆர். எச்.ஆர்.டி. நிறுவனத்தின் பின்பக்கமாகவுள்ள வாயில் ஊடாக வெளியேறினோம். அந்த வாயிலின் வெளியே மண்ணில் சில தறப்பாள் கூடாரங்கள் இருந்தன. அந்தக் கூடாரங்களுக்குள் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. நாங்கள் சென்ற நேரம், அவர்கள் தங்கள் காலை உணவைத் தயாரித்துக்கொண்டிருந்தார்கள். மெல்லிய மழை தூறிக் கொண்டிருந்தது. தறப்பாளுக்கு வெளியே மூன்று கல்லை வைத்து அதன் மீது தகரத்தை வைத்து அதில் ரொட்டி சுட்டுக்கொண்டிருந்தார்கள். பிஞ்சுக் குழந்தைகள் அந்த மண்ணில் தவழ்ந்து கொண்டிருந்தார்கள். தமிழகத் திரைப்படங்களில் காட்டப்படும் காட்சியை அது அப்படியே பிரதிபலித்தது.



எங்களை பாடசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு பொறுப்பாக வந்த சுரேஸிடம், இவர்கள் யார் எனக் கேட்டோம். அருகில் இடம்பெறும் கட்டுமானப் பணிகளில் பங்கேற்க வந்துள்ள கூலித் தொழிலாளர்கள் என்றும் இவர்கள் வடநாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் குறிப்பிட்டார். தமிழகத்திலும் கூலி வேலைகளுக்கு வடநாடு - மகாராஷ்டிரா போன்ற இடங்களிலிருந்து வருவதைப்போன்று அங்கும் வருகின்றார்கள். இவர்கள் இப்படித்தான் நாடோடி வாழ்க்கை நடத்துபவர்கள் எனவும் சொன்னார். அங்கிருந்த பாடசாலை செல்லும் வயதுடைய சிறுவர்களும் பெற்றோருடன் வேலைக்குச் செல்பவர்கள் என்றும் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து பாடசாலையைச் நோக்கிச் செல்லும் வழியில் குருக்குள் ஆண்கள் பாடசாலையின் காலைப் பிரார்த்தனை நிறைவடைந்திருந்தது. பிரார்த்தனை முடிவடைந்ததும் மாணவர்கள் அணிவகுத்து வகுப்பறைக்குச் சென்று கொண்டிருந்தார்கள். சில மாணவர்கள் சீருடை அணிந்திருந்தார்கள். சிலர் வர்ண ஆடை அணிந்திருந்தார்கள். காலில் செருப்புடனும் சிலர் வந்திருந்தார்கள். அவற்றைப் பார்த்தவாறே பெண்கள் பாடசாலைக்குச் சென்றோம். அங்கு காலைப் பிரார்த்தனை நிறைவடைந்து, எங்களின் வருகைக்காக அவர்கள் காத்திருந்தார்கள். அங்கும் மாணவிகள், வர்ண உடை, சீருடை என இருவேறு உடைகளுடன் இருந்தார்கள். நாங்கள் சென்றதும் பாடசாலையின் அதிபர் (அங்கு தலைமை ஆசிரியர் என்றுதான் குறிப்பிடுவார்கள்) மாணவர்களை இங்கே வைத்திருக்கட்டுமா அல்லது வகுப்புக்கு அனுப்பட்டுமா என்று எங்களிடம் கேட்டார்.

நாங்கள் மாணவர்கள் கற்கும்போது பார்வையிட விரும்புகின்றோம் என்று சொன்னதும் மாணவர்கள் அணிவகுப்பாக, பாண்ட் இசையுடன் வகுப்புக்குச் சென்றார்கள். எங்களுக்கும் பாடசாலை நாட்கள் மனதில் வந்துபோயின.

அந்தப் பாடசாலை தெலுங்கானா அரசாங்கத்தால் இயக்கப்படுகின்றது. மாணவர்கள் தங்கி நின்று கல்வி கற்கும் பாடசாலை. 600 மாணவர்கள் வரையில் கற்கின்றனர் என்றும் அவர்கள் ஹைதராபாத்தின் பல பிரதேசங்களிலிருந்தும் அங்கு வந்து தங்கியிருந்து கற்பதாக அதிபர் கூறினார். தண்ணீர்தான் அங்கு பிரச்சினை , பல கிலோ மீற்றர் தூரம் சென்றே தண்ணீரைக் கொண்டு வரவேண்டியிருக்கின்றது எனஅவர் சொன்னார். அருகிலிருக்கின்ற எங்கள் நிறுவனத்தினுள் தண்ணீருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் அரசாங்கத்தின் பாடசாலையில் தண்ணீர் வசதி ஒழுங்காக இல்லை. ஒரேயொரு மதில் சுவருக்குள் இவ்வளவு வித்தியாசமா என்றுதான் தோன்றியது. மாணவர்களுக்கு மதிய உணவு அதுவும் முட்டை, இறைச்சி எல்லாம் இலவசமாக வழங்கப்படுகின்றன. சீருடை கூட அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்படுகின்றது. விடுமுறை முடிந்து சில நாட்களுக்கு முன்னர்தான் பாடசாலை ஆரம்பமாகியது என்பதால் வர்ண உடைகளுடன் மாணவர்கள் சிலர் வந்ததாக பாடசாலை அதிபர் குறிப்பிட்டார்.

அதிபருடனான உரையாடலைத் தொடர்ந்து தரம் -9 வகுப்பு ஒன்றுக்குள் நுழைந்தோம். ஆங்கிலமொழி மூலமே மாணவர்களுக்கான கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எங்களுடன் வந்திருந்த சகோதர மொழி நண்பர், மாணவிகளுடன் நட்புறவான கேள்வி - பதில் உரையாடலை நடத்தினார். இலங்கை தொடர்பில் மாணவிகளுக்கு பெரியளவில் தெரிந்திருக்கவில்லை. ஆனால் யொஹானியின், மெனிக்கே மஹே ஹித்தே பாடல் மாணவிகளுக்கு தெரிந்திருந்ததுடன் சில வரிகள் எங்களுக்காக பாடியும் காட்டினார்கள். அவர்களுடனான சிறிய உரையாடல்களை முடித்துக்கொண்டு நாங்கள் அங்கிருந்து புறப்பட்டோம்.

(பயணம் தொடரும்)